# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆவணி 25 வியாழக்கிழமை (10-09-1998) UTHAYAN A Lively National Tamil Daily சுடர்: 245


## வன்னியில் புலிகளைசந்திக்கவில்லை என்கிறார் ஜயலத் ஜெயவர்த்தனா!

### சி.ஐ.டி. நேற்றிரவு 4 மணி நேர விசாரணை

கொழும்பு, செப். 10

ஐ. தே. கவின் நியமன எம்.பியான ஜயலத் ஜெயவர்த்தனா நேற்றிரவு ஏழு மணி முதல் 11 மணி வரை அவரது வாசஸ்தலத்தில் வைத்து இரகசியப் பொலீஸாரால் விசாரிக்கப்பட்டார்.

வன்னிக்கு ஐ தே. க. பிரமுகர் ஒருவர் சென்றதாக ஜனாதிபதி குருநாகலில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்திருந்தார்.

ஜயலத் ஜெயவர்த்தனா வன்னிக்குச் சென்றது குறித்தும் —

விடுதலைப் புலிகளுடன் அவர் பேசினாரா என்பது குறித்தும் — இரகசியப் பொலீஸார் அவரிடம் விசாரித்ததாகத் தெரியவந்தது.

நேற்றிரவு அவருடன் உதயன் செய்தியாளர் தொடர்பு கொண்டபோது அவர் தெரிவித்ததாவது:-

மடுவுக்குச் சென்று 3 நாள்கள் தங்கியிருந்தேன். அங்கு தங்கியிருந்த பாதிக்கப்பட்ட மக்களுடன் கதைத்தேன். அவர்களின் தேவைகள் குறித்துக் கேட்டறிந்தேன்.

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் பணிக்காக கட்சியால் நியமிக்கப்பட்டுள்ள நான் கிழக்கில், வவுனியாவில் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்தது போன்றே மடுவிலும் சந்தித்தேன்.

விடுதலைப் புலிகள் பிரமுகர்களை நான் சந்திக்கவில்லை — இப்படி அவர் தெரிவித்தார்.

(இ-3)

## ஈழவேந்தன் உட்பட ஐவரும் விடுதலை!

### புலிகளுக்கு உதவிய வழக்கில்

சென்னை, செப். 10

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு வழங்கவென தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு மருந்துப் பொருள்களைக் கடத்தியதாக கடந்த பெப்ரவரி மாதம் கைது செய்யப்பட்டிருந்த நான்கு இலங்கையரும், ஓர் இந்தியரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

மறவன்புலவு சச்சிதானந்தம், ஈழவேந்தன், டாக்டர் மாலினி ராஜநாயகம், பாண்டியன் ஆகிய இலங்கைத் தமிழரும், டாக்டர் ஸ்ரீதர் எனப்படும் தமிழகத்தவருமே கைதாகியிருந்தனர்.

இந்தியாவில் தடை செய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகளுக்கு மருந்து அனுப்பியமை பாரதூரமான குற்றம் என இந்த வழக்கில் வாதாடப்பட்டது.

விடுதலைப் புலிகளுக்கு மனிதாபிமான உதவியாக மருந்து அனுப்புவதும், காயமடையும் புலி உறுப்பினர்களுக்கு சிகிச்சை அளிப்பதும் சட்ட விரோதமான செயல் அல்ல என்று மனித உரிமை அமைப்புக்கள் கோரி வந்தன.

இந்நிலையில் சென்னை நீதிமன்றத்தில் இது தொடர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மத்தியஸ்தம் வகிக்க இந்தியா முற்படாது!

## பெண் கான்ஸ்டபிளிடம் துப்பாக்கி பறிப்பு

கொழும்பு, செப். 10

கொழும்பு - கட்டுநாயக்க வீதியில் உள்ள சோதனை நிலையத்தில் கடமையில் இருந்த, பெண் கான்ஸ்டபிள் மீது மிளகாய்த் தூள் வீசிய இருவர் அவரது துப்பாக்கி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பாரதீய ஜனதா தலைவர் தெரிவிப்பு

புதுடில்லி, செப்டெம்பர் 10

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் ஆரம்பிக்க இந்தியா மத்தியஸ்தம் செய்வதற்கு முற்படமாட்டாது என்று ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் குஷபா தாக்கரே தெரிவித்தார்.

டில்லியின் கிழக்கு நகரம் ஒன்றில் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை விடயத்தில் மீண்டும் இந்தியா தலையிட்டுச் சேறு பூசிக்கொள்ள மாட்டாது.

தமிழ் அரசியல்வாதிகள் இலங்கை விடயத்தில் தலையிடுமாறு கோரி வந்தது போதும், நாம் மத்தியஸ்தம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## லலித் கொலையில் பொலீஸ் அதிகாரி கைது

கொழும்பு, செப். 10

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி படுகொலை தொடர்பாக அநுராதபுரத்தில் பயங்கரவாத தடுப்புப் பிரிவுப்பொறுப்பதிகாரியாகப் பணியாற்றிய இன்ஸ்பெக்டர் தேவசுந்தர நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

புலனாய்வுப்பொலீஸ்பிரிவு அதிகாரிகள் அநுராதபுரம் சென்று இவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். இவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

(இ-3-21)

## தொண்டாவுக்கும் பேரனுக்கும் பிடிவிறாந்து

கொழும்பு, செப். 10

இ. தொ. கா. தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான், அவரது பேரனான இ. தொ. கா. பொதுச் செயலாளர் ஆறுமுகம் தொண்டமான் ஆகியோரைக் கைது செய்து கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் இன்று ஆஜர் செய்யுமாறு கொழும்பு மாவட்ட நீதிபதி சரத் அம்பேபிட்டிய உத்தரவிட்டுள்ளார்.

இ. தொ. கா. வருடாந்த மாநாடு தொடர்பாக இ. தொ. காவின் முன்னாள்

( 10 ஆம் பக்கம் பார்க்க)

# குற்றமிழைத்த படையினர் மீது போதுமான நடவடிக்கை இல்லை!

## சர்வதேச ஜூரர்கள் சபை கண்டனம்

கொழும்பு, செப். 10

இலங்கையில் பாதுகாப்புப் படையினரால் 1983 இல் இருந்து தமிழர்களும், சிங்களவர்களும் சட்டவிரோதமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஆனால் இத்தகைய படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றுக்குப் பொறுப்பானவர்கள் மீது குற்றஞ்சாட்டி வழக்குத் தொடர முறையாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஜெனிவாவில் இயங்கும் சர்வதேச ஜூரர்கள் சபை மேற்கண்டவாறு குற்றஞ் சாட்டியுள்ளது.

இப்படியானவர்களுக்கு எதிராக முனைப்பாக நடவடிக்கை எடுக்கும்படி அறிக்கையொன்றில் அது கேட்டுக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பாதாள உலகைச் சேர்ந்த ஒருவர் சுட்டுக் கொலை!

### பொலீஸாருடன் மோதல்

கொழும்பு, செப். 10

பொலீஸ் புலனாய்வுத் துறை அதிகாரியான சாந்தி குமார் கொலை உட்பட பல கொலைகள் தொடர்பாகத் தேடப்பட்டு வந்த பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த பேர்னாட் கிறிஸ்தோபர் பாறி என்பவர் நேற்று முன்தினம் இரவு பொலீஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ராகமவில் உள்ள அவரது வீட்டைச் சுற்றிவளைத்த பொலீஸார் அவரைக் கைது செய்ய முயன்றனர்.

அங்கு இடம்பெற்ற துப்பாக்கிப்பிரயோகத்தைத் தொடர்ந்து அவர் கொல்லப்பட்டார். அவருடன் தங்கி

(10 ஆம் பக்கம் பார்க்க)

மிச்சந்திரனி



அப்ப எட்டாத பழம் புளிக்கும் என்டு சொல்லுங்கோ!

## மீன்பிடிக்கச்சென்றவர்கள் சடலமாக மீட்கப்பட்டனர்

### கிரான் வாவியில் சம்பவம்

மட்டக்களப்பு, செப். 10

மட்டக்களப்பு மாவட்டம் கிரான் வாவியில் நேற்று முன்தினம் இரவு மீன் பிடிக்கச் சென்ற இரு சகோதரர்கள் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் சடலமாக நேற்றுக் காலை மீட்கப்பட்டனர்.

சாமித்தம்பி ஜெகதீஸ்வரன் (27 வயது), சாமித்தம்பி யோகேஸ்வரன் (24 வயது) ஆகிய இருவரும் நேற்று முன்தினம் மீன்பிடிக்கச் சென்றதாகவும் —

நேற்றுக் காலை வரை அவர்கள் வீடு திரும்பாததையடுத்து உறவினர்கள் அவர்களைத் தேடினர் என்றும் —

நேற்றுக் காலை இருவரும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## G. A. Q. 99/2000
## 1st in Com.

பேராதனை, யாழ்ப்பாணம்.

★ A/L இல் 3 பாடங்கள் சித்தியுடன் (கலை, வர்த்தகம், விஞ்ஞானம்) மேற் குறிப்பிடப்பட்ட பாடநெறிக்கு வெளிவாரியாக விண்ணப்பிக்கலாம்.

★ சகல பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

விரிவுரைகள் ஆரம்பம்:- 26-09-1998

விவரங்களுக்கு:

S. அருள்நங்கை,

**புதிய உயர் கல்லூரி,**

ஆரியகுளம் சந்தி, யாழ்.

(59013)


## நகரசபை, சாவகச்சேரி.

நிர்மாணப் பணிகள் தொடர்பிலான

## அறிவித்தல்

சாவகச்சேரி நகரசபையின் எழுத்து மூலமான அனுமதி பெறாது அதன் எல்லைக்குள்—

1. காணி உபபிரிவிடுகை செய்தல்.
2. கட்டடங்கள் எழுப்புதல்.
3. இதர நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளுதல்
4. ஏற்கனவே உள்ள கட்டடங்களின் அமைப்பில் மாற்றங்கள் செய்தல்
5. அமைவுச் சான்றிதழ் பெறாது குடியிருத்தல்

ஆகிய செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் சட்ட விரோதமானதாகும். அனுமதி பெறாது மேற்கூறிய அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்வோர் மீது திருத்தப்பட்ட நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்ட இலக்கம் 41/1978 இன் ஏற்பாடுகளுக்கமைய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

ஏற்கனவே அனுமதி பெறாது நிர்மாணப் பணிகளை மேற்கொண்டோர் உரிய விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து தங்கள் அமைப்புக்களை சட்ட பூர்வமானதாக ஆக்கிக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

மு. செ. சரவணபவ
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
07—09—98

(சி/4827)

## மரண அறிவித்தல்கள்

### நடராசா இதயசூரியன்

(டென்மார்க்)

சுதுமலை வடக்கைச் சேர்ந்த நடராசா இதயசூரியன் 07. 09. 98 திங்கட்கிழமை அன்று டென்மார்க்கில் காலமானார்.

இவர் - நடராசா பொற்குணதேவி தம்பதிகளின் அன்பு மகனும், நாகலக்ஷ்மி சர்வேஸ்வரன் (கனடா), வாகீசன் (1 ஆம் வருடம் விஞ்ஞானபீடம், யாழ். பல்கலைக்கழகம்), வாசுதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சர்வேஸ்வரனின் (கனடா) அன்பு மைத்துனரும், நிறோஜன், தினேஸ், அசோக் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13. 09. 98 ஞாயிற்றுக்கிழமை டென்மார்க்கில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ. நடராசா.
[தகப்பன்]

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

[59070]

### ஆறுமுகம் சிவசுப்பிரமணியம்

(உரிமையாளர், மணியம் ஸ்ரோர்ஸ், வாதுவ)

அராலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (09-09-98) காலமானார்.

இவர் சிவசுப்பிரமணியம் நல்லம்மாவின் அன்புக் கணவராவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-09-98) காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி பூணாவடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. நல்லம்மா
(மனைவி)

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

(5908?)

# 45 ஆயிரம் குழந்தைகளுக்கு போலியோ மருந்து வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப். 10

யாழ். மாவட்டத்தில் இம்முறை 45 ஆயிரம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்துவழங்குவதற்குத்திட்டமிடப் பட்டுள்ளது.

நாடு முழுவதும் இம்மாதம் 19 ஆம் திகதியும், ஒக்டோபர் 24 ஆம் திகதியும் போலியோ சொட்டு மருந்து 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு வழங்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் போலியோ மருந்து வழங்குவதற்கான ஏற்பாடுகளை மாகாண சுகாதார பிரதிப் பணிப்பாளர் அலுவலகம்மேற்கொண்டுள்ளது யாழ்.மாவட்டத்தில் 125 நிலையங்களில் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படவுள்ளது.

போலியோசொட்டுமருந்து வழங்கும் நிகழ்வுக்கு றோட்டறிக்கழகம், லயன்ஸ்கழகம் செஞ்சிலுவைச் சங்கம், பிரெஞ்சு மருத்துவக்குழு, செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு, உட்பட பல அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் தமது ஒத்துழைப்பினையும், உதவிகளையும் வழங்கவுள்ளதாக சுகாதார திணைக்களமாகாணப்பணிப்பாளர் டாக்டர் தா. சிவபாதம் தெரிவித்துள்ளார்.

(இ-5)


**SHAMROCK**

A/L Day Class

கலை, வர்த்தகம்
ஆரம்பம்: 16/9
புதன் 7-30 a.m.

★ Organic Che.
Mr. அன்பழகன்
Mon., Wed. 5 p.m.
★ 99 G. A. Q. & 1st in Com.
★ Spoken English
★ Yr. 8, 9, 10 & 11
★ 99 புலமை பரிசில் 5

(சி/4829)

**நாகம்ஸ் சினிமா**

சுன்னாகம்
கமல் (இருவேடம்)
சுகன்யா நடித்த
**இந்தியன்**
திரைப்படக் கூட்டுத்தாபன (ரீல்ஸ்) படம்
காட்சிகள்
10 - 30, 2 - 30

(59080)

**ராஜா டாக்கீஸ்**

யாழ்ப்பாணம்.
ரஜனி, மீனா
நடித்த
**முத்து**
(கடைசி வாரம்)
10-30, 2-00, 5-00
(புதிய நேரம்)

**ராஜா 'B' திரை**

யாழ்ப்பாணம்.
இன்று
விஜயகாந்த் - சுகன்யா
கவுண்டமணி, செந்தில்
மனோரமா நடித்த
**சின்ன கவுண்டர்**

(சி/4778)

**லிபேட்டி தியேட்டர்**

அச்சுவேலி.
இன்று முதல்
ராம்கி - சங்கவி
நடித்த
**எல்லாமே என் பொண்டாட்டி தான்**
(புதிய வெளியீடு)
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070-212228

(59037)

**ஸ்ரீ செல்வா**

திரையரங்கு
ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம்.
தினசரி
10-30 — 2-30 மணி.
(பழைய நேரம்)
சரத்குமார் - சிம்ரான்
மன்சூர் அலிகான்
செந்தில் நடித்த
நட்புக்காக
(நேரடி CD யில்)

(59081)


## கிராம சங்கம் புனரமைப்பு

தென்மராட்சி, செப். 10

கடந்த மூன்று வருடங்களாக இயங்காமல் இருந்த கிளாலி கிராமிய அபிவிருத்திச் சங்கம் அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்டது.

பளைப் பிரதேச செயலக கிராமிய அபிவிருத்தி அலுவலர் ம. அழகேந்திரனின் தலைமையில் நடைபெற்ற புனரமைப்புக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது.

(ஐ-117)

## முக்கிய அறிவித்தல்

எமது நிறுவனமாகிய த சென்றல் பினான்ஸ் கம்பனியில் வாகனங்களுக்கு பினான்ஸ் (கடன்) பெற்றவர்கள் உடனடியாக 12-9-98 க்கு முன்னர் என்னுடன் தொடர்பு கொள்ளவும். தவறின் நடவடிக்கை எடுக்கநேரிடும்.

உதாரணமாக: 29/ 7498,
60/ 2769,
30/ 7330,
28/ 3638 இலக்க வாகனங்கள்

இங்ஙனம்

செ. பத்மநாதன்,
வட கிழக்கு ஆராய்வாளர்,
த சென்றல் பினான்ஸ் கொம்பனி லிமிட்டெட்,
185, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(59083)


**A\L தமிழ்**

ஆசிரியர்: பண்டிதர் ஈஸ்வரநாதபிள்ளை

வகுப்புகள் ஆரம்பம்: 12 - 09 - 98 சனி

| | முதற்பிரிவு | இரண்டாம்பிரிவு |
| --- | --- | --- |
| 2000 — | 8. 00 9 00 | 11. 00 — 12. 00 |
| 99 — | 9. 00 - 10. 00 | 12. 00 — 1 00 |

அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

**தெஸ்பியன் கல்வி நிலையம்**

K. K. S. வீதி, இணுவில்.

(59078)


## 13 ஆம் ஆண்டு நினைவலைகள்



| மண்ணில்: | விண்ணில்: |
| --- | --- |
| 16 | 03 |
| — | — |
| 12 | 09 |
| — | — |
| 1921 | 1985 |

அமரர்

### முருகப்பர் கந்தையா

திதி: 10-09-1998 சதுர்த்தி

ஆண்டுகள் பதின்மூன்று பறந்தபோதிலும் உங்கள் அன்பு நினைவுகள் என்றும் நிலைத்திருக்கும்.

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

க. தர்மகுணசிங்கம்,
44/1, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(59084)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலமதங்களையும்ஒருகண்கொண்டு நோக்கியவர் சுவாமி விவேகானந்தர்

## சிலை திறப்பு விழாவில் உரை

யாழ்ப்பாணம், செப். 10 அமெரிக்காவின்சிக்காக்கோ நகரில் இடம் பெற்ற சர்வசமய மாநாட்டின் கதா நாயகனாக விளங்கியவர் சுவாமி விவேகானந்தர். அனைத்து மதங்களையும் ஒரேகண் கொண்டு நோக்கிய அவரது பரஸ்பர புரிந்துணர்வே அவரை கதாநாயகனாக்கியது.

இவ்வாறு தெரிவித்தார் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த ஸ்ரீமத்சுவாமி அஜராத்மானந்தாஜி.

யாழ். இந்துக்கல்லூரியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற விவேகானந்தர் சிலை திறப்புவிழாவிலும், குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெற்ற விசேட சமயச் சொற்பொழிவிலும் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே சுவாமிகள் இவ்வாறு தெரிவித்தார்.

ஸ்ரீமத்சுவாமி அஜராத்மானந்தாஜி மேலும் கூறியதாவது:-

சுவாமி விவேகானந்தர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சிக்காக்கோவிற்கு சென்ற சமயம் அங்கு அவரைக் கண்டவர்கள், இவர் ஓர் இந்துத் துறவி. இவருக்கு என்ன தெரியப்போகிறது என தம்முள்ளே பேசிக் கொண்டனர்.

ஆனால் சுவாமிகள் மாநாட்டில்கலந்து கொண்டு உலகளாவிய ரீதியில் உள்ள மக்கள் யாவரையும் ஒரே கண் கொண்டு சகோதர, சகோதரிகளே என அழைத்ததன் மூலம் இதுவே இந்து சமயம் நோக்கும் நோக்கு என்பதை சகலரும்உணர்ந்து சுவாமிகளை சர்வசமய மாநாட்டின் கதாநாயகனாகக் கொண்டனர்.

சுவாமி விவேகானந்தர் ஒரு மனிதனுக்கு இருக்க வேண்டிய 32 இலட்சணங்களும் ஒருங்கே அமையப் பெற்றவர். ஓர் இளைஞனின் எண்ணங்கள், சிந்தனைகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு சுவாமிகளது வாழ்க்கை ஓர் எடுத்துக் காட்டாகும்.

உலகளாவிய ரீதியில் அன்புதான் மேலானது. அன்பினால் இறைவனைக் காணலாம். நாம் ஒவ்வொருவரும் பிற உயிர்களில கடவுளைக் காண வேண்டும்.

அத்தகைய அன்பினால் உலகை வென்ற மாபெரும் ஞானிசுவாமி விவேகானந்தர் அவரின் பாதம் பட்ட பூமியான யாழ். இந்துக்கல்லூரி சுவாமிகளதுஎண்ணங்களைப் பிரதிபலிக்கின்ற கல்லூரியாக விளங்க எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டும்— என்றார்.

சுவாமி விவேகானந்தரின் சிலைத் திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டயாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் பேசுகையில் கூறியதாவது—

சர்வசமய மாநாட்டின் முன்னணி நாயகன் சுவாமி விவேகானந்தர். அவரது பாதம் பட்ட பூமியாகிய யாழ். இந்துக்கல்லூரி அவரது வருகையுடன் புனிதம் பெற்றது. இன்று சுவாமிகளது சிலையைத் திறந்ததன் மூலம் மீண்டும் புதுப் பொலிவு பெற்றது.

சுவாமிகளது போதனைகளை அடிப்படையாகக் கொண்டு நாம் எமது வாழ்க்கையை வளம்படுத்திக் கொள்வோமாக என்றார்.

யாழ். இந்துக்கல்லூரிப் பிரதி அதிபர் வி மகேஸ்வரன் பேசுகையில் தெரிவித்ததாவது:-

இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளது வருகை மூலம் யாழ். இந்துக் கல்லூரி புதுப் பொலிவு பெற்றிருக்கிறது. சுவாமிகளது வருகை எமது கல்லூரி மாணவர்கள் மனத்திலே புதிய சிந்தனைகளை ஏற்படுத்துவதாக அமையட்டும்— என்றார்.

சிலைத் திறப்பு விழாவில் 'பாதம் பட்ட பூமி புனிதம் பெற்றது' என்ற தலைப்பிலான இசை நிகழ்ச்சி ஒன்றும் நடத்தப்பட்டது.

(ஐ-7)

# வடக்குக்கும் தெற்குக்கும் பொது மக்கள் குழுக்கள்

## அழைத்துச் செல்ல ஏற்பாடு

கொழும்பு, செப். 10 வடக்கிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு குழுவினரைத் தெற்குக்கும், தெற்கிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு குழுவினரை வடக்குக்கும் அழைத்துச் செல்வதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகத் தேசிய ஒருமைப்பாட்டுச் செயற்றிட்டப் பிரிவின் இயக்குநர் பேராசிரியர் காமினி கீரவெல்ல தெரிவித்துள்ளார்.

வடக்கிலும் தெற்கிலும் வாழும் மக்களுடன் கலந்துரையாடி பரஸ்பரம் பிரச்சினைகளை அறிந்து கொள்ள வைப்பதே இதன் நோக்கம் எனவும் இப்படியான ஏற்பாடுகள் மூலம் இரு இன மக்களும் ஒருவர் பிரச்சினையை மற்றவர் இனங்காணவும் அதனைத் தீர்ப்பதற்கான வழி முறைகளைப் பற்றிச் சிந்திக்கவும் வழிபிறக்கும் எனவும் இன உணர்வுகளைக் களைந்து சுமுகமான உறவுகளை மேற் கொள்ள இது உதவும் என நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-154)


ஞாபகம் இருக்கிறதா?

சென்ற ஆண்டில், அறிவித்தது போலவே நாம், வகுப்புகளை நடத்தி உங்கள் தேவையை நிறைவேற்றினோம் என்பது ஞாபகமிருக்கிறதா?

DAY CLASS
AL/99

கலை, வர்த்தகப் பிரிவு

ஆரம்பம்: 14-09-1998
திங்கள் 8மணி (பழைய நேரம்)

D. M. I.

366, ஸ்ரான்லி வீதி, யாழ்.

D. SAM

(சி/4818)


# மரம் வெட்டத் தடை

தென்மராட்சி, செப். 10 பளைப் பகுதிக் காடுகளில் உள்ள சஞ்சீவி, சவுக்கு ஆகிய மரங்களை வெட்டுவது தடைசெய்யப்பட்டுள்ளதுடன் இந்தப்பகுதிகளிலிருந்து விறகுகள் கொண்டு வருவதற்கும் கிராம அலுவலரின் சிபார்சுக் கடிதம் பெறவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-117)


31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 15 | | 12 |
| — | | — |
| 09 | | 08 |
| — | | — |
| 1942 | | 1998 |



அமரர்

தம்பையா குணலிங்கம்

(ஓய்வுபெற்ற புகையிரதநிலைய அத்தியட்சர், மருதானை)

சபிண்டீகரணமும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை 11 - 09 - 98 வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதிய போசன வைபவத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

(59071)



மங்களகரமான திறப்பு விழா





அன்புடையீர்!

நிகழும் வெகுதானிய வருடம் புரட்டாதி மாதம்
(10-09-98) வியாழக்கிழமை இன்று
10-00 மணிக்கு
வரும் சுபவேளையில் இதுவரை இயங்கி வந்த
றீகல் மினி திருத்தப்பட்டு
40 அடி அகலத்திரையில்
இதுவரையும் எங்கும் பார்த்திராத
"ஸ்ரிடியோ ஸ்போனிக்" சவுண்டுடன்

றீகல் டாக்கீஸ்

என்னும் திரையரங்கைத் திறக்க உள்ளோம்.

சுப்பஸ்ரார் ரஜனி – நக்மா நடிப்பில்

பாட்ஷா

புதிய நேரம் 2-30 பி. ப. நேரடி C. D. யில் இருந்து

சரத்குமார் இருவேடம் – சிம்ரான் நடிப்பில்

நட்புக்காக

புதிய நேரம் 5-30 நேரடி C. D. யில் இருந்து

★ முக்கிய குறிப்பு! பெண்களுக்கு என்று BOX SEAT அமைக்கப்பட்டுள்ளது.

இடம்:
றீகல் வீடியோ
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

(59060)



ஒன்பது ஆண்டு மலர்வுகளில் உங்கள் நினைவுகள்



முருகர் சின்னத்துரை

(முன்னாள் அரசாங்க எழுது வினைஞர் கல்வி அமைச்சு)

| அன்னையின் அரவணைப்பில் | அந்நியவனின் அழிப்பில் |
|---|---|
| 13 - 01 - 1926 | 21 - 08 - 1989 |

திதி:- 10 - 09 - 98

மனைவி, மகள், மருமகன், பேர மழலைச் செல்வங்கள்.

"குமரன் கோட்டம்,"
அல்வாய் வடமேற்கு,
அல்வாய்.

(சி-4821)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
# இந்து மாமன்றம்
# இராமகிருஷ்ணமிஷன் துறவிகள் வரவேற்புஇதழ்

## என்றும் இறையருள் சூழுக; நன்று நம்வாழ்வு மலருக!

இராம கிருஷ்ண சபையைச் சேர்ந்த மூன்று அருட் திரு துறவிகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு வருகை தந்து நல்லாசிகள் வழங்கவிருப்பது அறிந்து மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன். வீரத் துறவி சுவாமி விவேகானந்தரின் திரமான இறை சிந்தனைகள் எம்மையெல்லாம் ஆரத்தழுவவும் அந்தச் சிந்தனைகள் முக்கியமாகக் கல்லூரி மாணவர்களுக்கு ஆன்மீக எழுச்சியையும், மனித நேயச்சேவையில் ஈடுபாட்டையும் தர வேண்டுமென இறைவனை யாசிக்கின்றேன்.

க. சண்முகநாதன்
யாழ். மாவட்ட அரச அதிபர்

## மாண்பு தரும் பெரு வருகை

எங்கள் இந்து மாமன்றத்திற்கு இராம கிருஷ்ண சபைச் சுவாமிகள் மூவர் வருவதைக் குறித்து நாங்கள் பொங்கும் உவகையும், பூரிப்புமடைகின்றோம். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களும், வண. பேர்சிவல் அடிகளாரும் கல்வித் தொண்டாற்றிய கற்பக விருட்சம் எங்கள் கல்லூரி மகாத்மா காந்தி அடிகளின் காலடிபட்டுக் கனிந்து நிற்பதும் எங்கள் கல்லூரி. இன்று வருகை தரும் சுவாமிகள் மூவரின் அருட்கண்ணோக்கு எம்மீது படிவதும் எங்கள் கல்லூரிக்கு மேலும் அணி செய்வதாகும். சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு நிறைவு நிகழ்ச்சிகள் நடைபெறும் இத்தருணத்தில் அவரின் அரிய சிந்தனைகளை இச்சுவாமிகள் மூவரின் தரிசனத்தினூடாக முன்னெடுத்துச் செல்வோமென உறுதி பூணுகின்றோம்.

அன்பே இன்ப ஊற்று!

உ. தவபாலன்
தலைவர், இந்து மாமன்றம்
யாழ். மத்தியகல்லூரி

## மத்தியம் மாண்பு பெற..

உறுதி கொண்ட நெஞ்சும்
ஊக்கமுள்ள தொண்டும்
பொறுதி கொண்ட மனமும்
பூரிப்புள்ள அன்பும்
இறுதியான கொள்கை
என்று சொன்ன நரேனின்
அறுதியான செய்தி
அகிலம் போற்றச் செய்வோம்!
மத்தியத்தின் செல்வர்
மாண்புபெற்று உய்ய!

நா. க. சண்முகநாதபிள்ளை
முன்னாள் அதிபர்



★ வண. சுவாமி
விருபக்ஷானந்தாஜி மகராஜ்

★ வண. சுவாமி
ஆத்மகணாநந்தாஜி மகராஜ்

★ வண. சுவாமி
அஜராத்மானந்தாஜி மகராஜ்

## வருக, வருக அருட்துறவிகளே!

"பிறர்க்கென வாழும் பெரியாரைச் சார்ந்தால்
உறக்கமும் காணச் சுகம் வரும்"

ஞானத்தின் திருவுருவாய் ஞாலத்தைத் தம்வசப்படுத்திய வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வருகை தரும் இராமகிருஷ்ணசபை சுவாமிகள் மூவரையும் வரவேற்பதில் ஆனந்தமடைகின்றோம். நூற்றாண்டு விழாவை முன்னிட்டு எமது மன்றம் புத்தகக்கண்காட்சியும், சிறப்புரைகளும் நடத்தியது. துறவிகளின் திருவுருவப்படங்களையும் காட்சிக்குவைத்தது.

வெகுவிரைவில் நாங்கள் நாவலர்சிலை, பேர்சிவில் அடிகளாரின் சிலை, சுவாமி விவேகானந்தரின் சிலைகளை கல்லூரி வளாகத்தில் நிறுவத்தீர்மானித்துள்ளோம். அதற்குக் கட்டியம் கூறுவது போல் வருகை தரும் துறவிகள் அனைவரையும் வருக வருகவென வரவேற்கின்றோம்.

"வாசி தீரவே ஆசி நல்குவீர்"

கே. சி. சிவகுமாரன்
(சிரேஷ்ட பொறுப்பாசிரியர்)
ஞான. திருக்கேதீஸ்வரன்
(பொறுப்பாசிரியர்)

**சுவாமிஜிகள் அனைவரையும் அன்போடு வரவேற்று ஆசிபெறுவதில் அதிபர், ஆசிரியர்கள், துணை ஆளணியினர், பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் ஆத்மதிருப்தி அடைகின்றோம்.**

**எழுமின்! விழிமின்! கருதிய கருமம் கைகூடும் வரை அயராது உழைமின்!**

## அன்புடையார் எல்லாம் உடையார்

அன்பே இன்ப ஊற்று. அந்த அன்பை எல்லோரிடமும் காட்ட வேண்டுமென்பதே சுவாமி விவேகானந்தரின் ஆன்மீக நோக்கு. இந்தச் செய்தியைத் தலைமேற்கொண்டு எல்லோருக்கும் எடுத்தியம்பப் புறப்பட்டுள்ள இராமகிருஷ்ண சபையைச் சேர்ந்த மூன்று துறவிகளின் திருப்பாதங்கள் எமது கல்லூரி வளாகத்தில் பதிக்கப்பட்டு இருப்பது மத்தியகல்லூரிச்சமூகத்திற்குப் பெருமகிழ்ச்சியைத் தருகிறது.

அவர்களின் நல்லாசிகள் ஒளிமயமான எதிர்காலத்தை எமக்குத் தரவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

—க. இராசதுரை (அதிபர்)

## யாழ். மண்ணுக்குப் புனிதம்

யாழ்ப்பாணத்தில் கடந்த சனிக்கிழமை முதல் தெய்வீக அலையொன்று ஒளியுடன் வீசிக் கொண்டிருப்பதை யாவரும் அவதானிக்க முடிகிறது.

சர்வ சமய மாநாட்டில் பங்குபற்றிய பின்னர் அமெரிக்காவிலிருந்து இந்தியா செல்லும் வழியில் யாழ்ப்பாணத்திற்கு 1897 ஆம் ஆண்டு தனது காலடியை சுவாமி பதித்தார். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் அவருடைய நீண்ட பிரசங்கம் ஒன்று நிகழ்ந்தது. இந்து சமயத்தின் உடபொருளை- அதன் கோட்பாடுகளை— ஐயந்திரிபின்றி மக்களுக்கு எடுத்துரைத்தார். அந்த நாளில் இந்த யாழ்ப்பாணம் புனிதம் பெற்றது.

101 ஆண்டுகளுக்குப் பின்பு இந்த வாரம் யாழ்ப்பாணத்தில் மீண்டும் இராமகிருஷ்ண மிஷன் துறவிகளின்பாதம் பட்டு இந்த மண் மீண்டும் புனிதமடைந்துள்ளது. அதைத்தான் நான் இங்கு தெய்வீக அலை என்று கூறுகிறேன்.

துறவிகளின் இவ் விஜயமானது இந்துக்களின் மனதிலே முக்கியமானது. இளம் மாணவ-மாணவிகளின் இதயத்தில் நல்லூக்கத்தினையும், பண்பாட்டினையும் நாம நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும்; அதன் பாதுகாவலர் நாங்களே என்ற உயர் எண்ணத்தை அவர்கள் மனதில் தோன்றச் செய்துமுள்ளது.

ஆகவே அவர்களின் விஜயம் அவர்களுடைய நல்லாசி, அவர்களின் நல்லருள் உரைகள், மக்கள் சமுதாயத்திற்கு நல்லுரமாக அமையும் என்பதில் ஐயமில்லை. துறவிகளின் வருகை எம்மனத்திடையே நம்பிக்கையை உண்டாக்கி அதன் எதிரொலியாய் சமாதானமும் சுபீட்சமும் வளரட்டும்.

ஓம் சாந்தி!

து. வைத்திலிங்கம்
மேலதிக அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்.

(சி/ 4823)


உடுவில் வடக்கு, அருள்மிகு

### ஸ்ரீ சொர்ண விநாயகர் ஆலயம்
### பஞ்சமுகப்பிள்ளையார் வார்ப்பு வைபவம்

மேற்படி இந்த ஆலயக் கட்டடத் திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதோடு மூலவிக்கிரகமாக பஞ்சமுகப் பிள்ளையாரை ஸ்தாபிக்குமாறு தேவியின் அனுக்கிரகத்தால் ஆடி 26 செவ்வாய்க்கிழமை (11 – 08 – 98) கருவமைக்கப் பெற்றது. இதன் வார்ப்பு வேலையை இன்று வியாழக்கிழமை [10 – 09 – 1998] நிகழ்த்துவதற்கு அருள்பாலிக்கப்பட்டிருப்பதினாலே இத் திருப்பணி நிறைவேற விரும்பும் அடியார்கள் தம்மால் இயன்ற பொருளுதவிகளை மன நிறைவுடன் வழங்கி விநாயகர் அருள் பெறும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

ஸ்தபதி: கந்தசாமி மோகன் ஆச்சாரி
[ சிவன் கோயிலடி வடக்கு வீதி ]

- ஆலய பரிபாலகர்

உடுவில் வடக்கு,
சுன்னாகம்.

[59036]

SPOKEN ENGLISH
by
BRITTO
புதிய பிரிவு:
12 - 9 - 98 8 மணி
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்.
(59014)

SPOKEN ENGLISH
WITH
GRAMMAR
BY
திரு. K. சிவநேசன்
புதிய பிரிவு
11 - 09 - 98 3 மணி
குருபரன்
கல்வி நிறுவனம்
புத்தூர்
(59056)

### பிராந்திய மருந்து விநியோகப் பகுதிக்கான கட்டடம் வாடகைக்குப் பெறுவதற்கான அறிவித்தல்

சுகாதார சேவைகள் மாகாண
பிரதிப் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.

யாழ். பிராந்திய மருந்து விநியோகப் பகுதிக்கு 2000 சது. அடி பரப்பளவுடைய கட்டடம் வாடகைக்கு யாழ். மாநகர சபை எல்லைக்குள் தேவையாக இருக்கிறது.

இவ்வாறான கட்டடத்தை வாடகைக்குக் கொடுக்க விரும்புபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

வைத்திய கலாநிதி
க. தா. சிவபாதம்
பதில் மாகாண பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

சுகாதார சேவைகள் மாகாண
பிரதிப் பணிப்பாளர் பணிமனை,
இல. 46, மணிக்கூட்டுக் கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/4810)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி
# நிறுவுனர் நினைவு மலர்

10 - 09 - 1998

## ஆசிச் செய்தி

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியின் நிறுவுனர் நினைவு விழாவின் சிறப்பிதழுக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தமது கிராமத்தின் தேவையை உணர்ந்து அமரர் மழவராயர் கந்தையா அவர்களினால் அமைக்கப்பட்ட இக்கல்லூரி சகல வசதிகளுடனும் காணப்பட்டது. விசேடமாக விஞ்ஞானக் கல்விக்கான ஆய்வுகூட வசதிகள் சிறப்புறக் காணப்பட்டன.

மக்களுக்குத் தங்கு தடையின்றி கல்விச் செல்வத்தை வழங்க வேண்டும் என்ற பெரு நோக்குடன் 1934 ஆம் ஆண்டு இக்கல்லூரிக்கென அறக்கட்டளை கல்லூரி நிறுவுனரால் பிறப்பிக்கப்பட்டது.

அறக்கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் பல கோடி ரூபா பெறுமதி உடையவை. இதனால் பெறப்படும் வருமானம் கல்லூயின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படின் சகல வசதிகளுடனும் மிளிரக் கூடிய வாய்ப்புண்டு.

ஆகவே இச்சொத்துக்களை குத்தகைக்கு அல்லது வாடகைக்குப்பொறுப்பேற்றவர்கள் தமது பங்கினைச்செவ்வனே ஆற்றின் பெறப்படும் வருமானத்தைப் பாடசாலை நிர்வாகம் பாடசாலை அபிவிருத்திக்கும் மாணவர் நலனுக்கும் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும்.

புத்தூர் கிராமத்திற்கும் அதனைச் சூழவுள்ள கிராமங்களுக்கும் சிறந்த கல்விக்களமாக விளங்கிவரும் இக்கல்லூரி தொடர்ந்தும்சிறப்புடன் தனது சேவையைநல்க இறைவன் அருள் புரியவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

செல்வி தி. பெரியதம்பி
இணைப்பாறிய மாகாணக்
கல்விப் பணிப்பாளர்

## வாழ்வாங்கு வாழ்ந்த பெரியார்

வள்ளல் மழவராயர் கந்தையா அவர்கள் இற்றைக்கு ஆறு தசாப்தங்களுக்கு முன்னதாகவே தமது தேசத்து மக்களின் நலன் கருதி சிவன் தேவஸ்தானம், ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி அன்ன சத்திரம் என்பவற்றை அமைத்து வழங்கியதோடு மட்டுமன்றி அவை தொடர்ந்தும் மக்களுக்குச் சேவை செய்யும் பொருட்டு அறக் கட்டளைகளையும் அமைத்துள்ளார்.

அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட எமது கல்லூரியில் இலவசக் கல்வியை வழங்கியகன் மூலம் நம் நாட்டின் கல்வி வரலாற்றில் வள்ளலார் அவர்கள் முக்கிய இடம்பெறுகின்றார்.

இப் பெருந்தகை ஆரம்பித்த சோமஸ்கந்த கல்லூரியினால் பயனடைந்தவர்கள் பலர். நமது நாட்டில் மட்டுமன்றி, வெளிநாடுகளிலும் சிறந்த கல்விமான்களாகவும், சமூகத் தொண்டர்களாகவும் நற்பண்புடையர்களாகவும் அவர்கள் திகழ்கின்றார்கள்.

வள்ளலார் ஆற்றிய நற்பணிகளின் பயனை முற்றாக அனுபவித்த இக் கல்லூரிச் சமூகத்தினரால் தாபகரின் ஜயந்தி தினமாகிய செப்ரெம்பர் பத்தாம் நாளானது செய்ந் நன்றியறிதலுடன் நினைவு கூரப்பட்டு பரிசளிப்பு விழாவாகக் கொண்டாடப்படுகின்றது.

வாழ்க வள்ளலார் புகழ்!
வளர்க ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி!

வ. ஆறுமுகம்
அதிபர்

ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி,
புத்தூர்.



## குறிக்கோளை நிறைவேற்றுக!

"சைவசமயிகள் யாவரும் சைவசமயத்திலும் கல்வியிலும் சிரத்தையுடையவர்களாயின், நான் எடுத்த முயற்சிகள் எல்லாம் நிறைவேறிவிடும். நிறைவேறின், என்னைப் போலவே பிறரும் ஆங்காங்கே நன் முயற்சிகளைச் செய்வார்கள். செய்யின், கல்வியும் சமயமும் தழைத்தோங்கும்"

இவ்வாறு, நாவலர் அவர்கள் குறிப்பிட்ட வேண்டுகோளின்படி, அவர்களுக்கு வழிகாட்டியாய் — வாழையடி வாழையாய் நின்று, அவர்கள் கருதிய நன் முயற்சிகளையும் அவற்றின் பிற்காலத்திலும் உய்தற்கான அறக் கட்டளைகளையும் நிறை நிறுவிப் பணிசெய்த சான்றோரும் சிலருளர். அவர்களுள் சேர். பொன். இராமநாதன், மழவராயர் கந்தையா, நாச்சியம்மையார் என்னும் மூவரோடு வழிகாட்டியான நாவலர் அவர்களையும் முன் வைத்துச் சேர்த்தே "நலந்தரும் அறக் கட்டளை நாயகர்கள் நால்வர்" என்று பெரியோர் பெருமைப்படுத்துவர்.

இத்தகைய இவர்களுள் ஒருவரான மழவராயர் கந்தையா அவர்கள், ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி, சிவனாலயம், அன்னசத்திரம் என்னும் முப்பெருந் தாபனங்களையும் அவற்றுக்குரிய அறக்கட்டளை முதலியனவற்றையும் பிறருதவி சிறிதேனுமின்றித் தாமே ஈட்டிய வளங்கள் கொண்டே நிறைவு செய்து, பொதுமக்கள் யாவர்க்கும் நற்பயன்களே அனுபவிக்கும்படி வழங்கியதால், இச்சான்றோருக்கு "பெருங்கொடை வள்ளல்" என்ற சிறப்பும் தானாகவே வந்து சேரலாயிற்று எனலாம்.

இவ்வள்ளலார் நமக்குச் செய்த நன்றிக்கு, அவர்பால் உள்ள பெருமையை நினைவு படுத்துவது மாத்திரமன்று, அவர்கொண்ட நல்லெண்ணங்களை — அவரது குறிக்கோள்களை — மேம்படுத்திக்கொண்டு, அவற்றின் அபிவிருத்திச் செயல்கள் மூலமாக நிறைவேற்றும் பெரியதொரு கடமை உண்டு. ஆகலால், அவற்றின் நற்செயல்கள் யாவும் நிகழ்தற்கு, எங்கள் சோமஸ்கந்தப் பெருமானது திருவருளைப் பாலிக்குமாறு பரவுவோமாக.

வே. சந்திரசேகரம்பிள்ளை
ஒய்வுபெற்ற முன்னாள் அதிபர்.

## நிறுவுனர் நாள் நிகழ்வுகள்

காலம்: இன்று வியாழக்கிழமை பி ப 1 . 00 மணி

தலைவர்: திரு வ. ஆறுமுகம் (அதிபர்)

ஆசியுரை: சிவஸ்ரீ சாமி சோமசுந்தரக் குருக்கள்
(பிரதமகுரு, புத்தூர் சிவன் தேவஸ்தானம்)

பிரதமவிருந்தினர்:
பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம்
(விஞ்ஞான பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்: திரு. ஆ. இராசேந்திரன்
(கோட்டக்கல்வி அதிகாரி, கோப்பாய்)

நினைவுப் பேருரை:
திரு அ. க. த. கிருஷ்ணராசா
சமாதான நீதிவான், தலைவர் வ. கி. (தெ. ப) ப. நோ. கூ. சங்கம், நீர்வேலி

பரிசில் வழங்கல்: பிரதம விருந்தினர் அவர்கள்

## மேலும் சிறந்து விளங்குக

புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி பல கலைகளில் சிறந்த திரு. மழவராயரால் ஸ்தாபிக்கப்பட்டது.

கல்வித்தானம் மிகவும் உயர்ந்த ஒரு தானம். ஒரு மனிதனின் உள்ளக் கோவிலில் தீபம் ஏற்றுவதாக அமைந்தது அது.

இக்கல்லூரி மேலும் பல வகைகளிலும் சிறந்து விளங்க எல்லாம் வல்ல சிவபெருமானை வேண்டுகின்றோம்.

இறைபணியில்
சுவாமி சித்ருபானந்தா

ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்கிரமம்,
பருத்தித்துறை.

## வாழ்த்துச் செய்தி

சோமஸ்கந்தக்கல்லூரி நிறுவியவர் நினைவாக அக்கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருடைய முயற்சியிலே ஓர் இதழை அச்சிடுகிறார்கள். அவ்விதழுக்கு இச்சிறிய வாழ்த்துச் செய்தியினை எழுதுவதிலே மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். கல்லூரியை நிறுவிய அமரர் மழவராயர் கந்தையா அவர்களுடைய பணி யாழ்ப்பாணத்துத் தமிழர் கல்வி வரலாற்றிலும் பண்பாட்டு வரலாற்றிலும் இடம்பெறுவது,

அமரர் மழவராயர் கந்தையா மூன்று சிறப்பான அறக்கட்டளைகளை ஏற்படுத்தினார். புத்தூர் விசுவநாத விசாலாட்சி அம்மன் . கோயிலுக்கான அறக்கட்டளையைத் தன்னுடைய ஆன்ம ஈடேற்றுக்காக ஏற்படுத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார். புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரிக்கான அறக்கட்டளையை ஏற்படுத்தியபோது அது உலக நன்மைக்காக அமைக்கப்பட்டதென அப்பெரியார் குறிப்பிட்டார். இவ்விரண்டையும் விட அன்னசத்திரத்துக்கான ஓர் அறக்கட்டளையையும் ஏற்படுத்தினார். எங்கள் பல்கலைக்கழக மெய்யியல் முதுநிலை விரிவுரையாளரும் அமரருடைய உறவினருமாகிய திரு. க. சிவானந்தமூர்த்தி இவ்வறக்கட்டளைகள் பற்றி விரிவாக எழுதியுள்ளார்.

இம்மூன்று அறக்கட்டளைகளுள், மகாகவி சுப்பிரமணிய பாரதி, சோமஸ்கந்தக் கல்லூரிக்கான அறக்கட்டளையையே சிறப்பாகக் கருதுவான்.

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கியொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம கோடி
ஆங்கோர் ஏழைக்கெழுத்தறிவித்தல்.

சமூகத் தேவையை நன்குணர்ந்து அமரர் கந்தையாவினாலே தொடக்கப்பட்ட சோமஸ்கந்தக் கல்லூரி எத்தனை ஆயிரம் மாணவர்களை உருவாக்கியுள்ளது. எத்தனை பெரியவர்களை உருவாக்கியுள்ளது. அறிவு வழங்கும் நிறுவனமாக இது விளங்கி வருகின்றது. அறிவு ஞானமாக உயரவேண்டுமானால் கோயில் வேண்டும். இதனாலேதான் அவர் ஏனைய இரண்டு அறக்கட்டளைகளையும் ஏற்படுத்தினார்.

வாழையடி வாழையாக அறிவுப்பரம்பலுக்கு பெரியதொரு கல்லூரியைத் தொடக்கிய பெரியார் மழவராயர் கந்தையாவை நினைவு கூரும் இவ்விதழை வெளிக்கொணருபவர்களைப் பாராட்டி, என் வாழ்த்துக்களைக் கூறி இச்செய்தியை நிறைவு செய்கின்றேன்.

பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ்
கலைப்பீடாதிபதி
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

நிறுவுநர் இலட்சியமும் கல்லூரியும்
சிறப்புற வாழ்த்துவோர்:
ரட்ணம்ஸ் பாட்டா
49, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ALDI
75, Power House Road,
Jaffna.

CITY TAILORS
73, Power House Road,
Jaffna.

யாழ். வோச் வேக்ஸ்
55, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பாத அணி
திருத்துபவர்கள்
57, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

அம்பிகா பாத அணி
திருத்தும் கடை
61, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மதுரா நகைமாடம்
59, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

றெக்ஸ்
தையல் அகம்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேச்சுக்கு உதவுவதற்கு தொண்டா தயாராம்!

விடுதலைப் புலிகளுடன் பேச அரசு உடன்பட்டால் அதில் முக்கிய பங்காற்றத் தாம் தயார் என அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தன்னுடைய ஏற்பாட்டில் பேச்சு நடக்குமாயின், தற்போது வடக்கில் நடக்கும் யுத்தத்துக்கு முடிவு காணப்பட்டுச் சமாதானத்தை நிலை நாட்ட முடியும் என்றும் தொண்டா நம்பிக்கை வெளியிட்டார். (உ-3)

## அவசரகாலச் சட்டம் நீடிப்பு

நாடு முழுவதும் அவசர கால விதிகளை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிப்பதற்கான அறிவிப்பை ஜனாதிபதி நேற்று முன்தினம் விடுத்தார்.

"நாட்டின் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்தவும், மக்களைப் பாதுகாக்கவும் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது அவசியம்" என்று ஜனாதிபதி தமது அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பை சபாநாயகர் கே. பி. ரட்னாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

இது தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில் இன்று நடைபெறலாம் என எதிர் பார்க்கப்படுகின்றது.

# மழவரராயர் கந்தையாவின் தர்ம ஆதனங்கள்

## பற்றிய முக்கிய அறிவித்தல்

### (ஐந்தாம் பக்க நினைவு மலரின் அனுபந்தம்)

கீழ் வரும் ஆதன இடாப்பில் விவரிக்கப்பட்டுள்ள ஆதனங்கள் யாவும் பிரசித்த நொத்தாரிஸ் சி. கெங்காதர ஐயரால் 1934-03-07 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்திய 9690 ஆம் இலக்க தர்மசாதன உறுதிப்பிரகாரம் காலஞ் சென்ற மழவராயர் கந்தையாவினால் வழங்கப்பட்ட தர்ம ஆதனங்களாகும். இவ் ஆதனங்களின் வருமானங்களைக் கொண்டு தர்ம கர்த்தா சபை பாடசாலையின் வளர்ச்சிக்குப் பல வழிகளிலும் பாடுபட்டு வருகின்றது. பாடசாலை வளர்ச்சிக்குத் தாமாக உதவ முனவரா விட்டாலும் பாடசாலைக்குரிய வளங்களைச் சுரண்டுவது மனித பண்பாடற்ற செயலாகும்.

இதனைக் கருத்திற் கொண்டு இவ்வாதனங்களின் வாடகையாளர்கள், குத்தகைக்காரர்கள் யாவரும் தங்கள் குத்தகை ஒப்பந்தங்களைப் புதுப்பிக்கவும், நீடிக்கவும் இத்தால் இறுதிச் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. இன்றிலிருந்து மூன்று மாத காலத்துள் குத்தகைகளை, வாடகைகளைச் சட்ட பூர்வமாகப் புதுப்பிக்கவும் நிலுவைகளைக் கட்டவும் தவறும் குத்தகையாளர்கள், வாடகையாளர்கள் யாபேரும் தமது குத்தகைக் காலக் கணக்கை முடித்துக் கொண்டவர்களாகக் கருதப்பட்டு, இவ்வாதனங்கள் வேறு நபர்களுக்கு குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இத்தால் சம்பந்தப்பட்டவர்கள் அனைவருக்கும் அறிபத்தரப்படுகின்றது.

இவை தர்ம நம்பிக்கைக்குரிய ஆதனங்கள் என்ற காரணத்தினால் எவரும் எக்காலத்திலும், எக்காரணம் கொண்டும் சொந்த உரித்துக் கோர முடியாது என்பதைக் கவனத்திற் கொள்க. எனினும் இவ்வாதனங்களுக்கு எதிராகத் தமக்கு மாறான உரித்து உண்டு எனக் கோருபவர்கள் எவருமிருப்பின் இன்றிலிருந்து இருவார காலத்துள் பதிவுத் தபால் மூலம் தர்மகர்த்தா சபைக்கு அறியத்தருமாறு வேண்டப்படுகிறார்கள்.

வரைவு சி. வீரகத்திப்பிள்ளை — சட்டத்தரணி

வ. ஆறுமுகம். — தர்மகர்த்தா சபைச் செயலரும், பாடசாலை அதிபரும்

## ஆதன இடாப்பு

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி புத்தூர்க் கோவிற் பற்று புத்தூர் தெற்கிறை மடத்துவாசல் கிழக்குப் பாதியும், பெரிய வளவும், பயற்றொல்லைக் குடியிருப்பும், நாவலெல்லையும், நி. ப. 35 பனைகள், வான் பயிர்கள், செய்பயிர்கள் கிணறுகளும், பள்ளிக்கூடம் விடுதிச்சாலை உபாத்தியாயரின் வாசஸ்தலங்களும். இப் பரப்பு 35 -க்கும் எல்லை: கிழக்கு தாமு கை. பெண் ஆச்சிப்பிள்ளைக்கும், மறு பேருக்குமுடைய ஆதனங்கள். வடக்கு ஒழுங்கையும், மறுபேருக்குமுடைய ஆதனங்கள். மேற்கு சுவாமி நாதர் கந்தையாவுக்கும், மறு பேருக்குமுடைய ஆதனங்களும், ஒழுங்கையும் தெற்கு கோவிற்றெரு இது அடங்கலும்.
2. ஷெ வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார் பண்ணைக் கிழக்கிறை சோன்கனதுறை நி. ப. 3 இந்தப் பரப்பு 3 -க்கும்எல்லை: கிழக்கு பொன்னர் மகள் இலட்சுமிக்கும், பங்காளருக்குமுடைய ஆதனம். வடக்கு செல்லையா பரமநாதனுக்கும், பங்காளருக்குமுடைய ஆதனம். மேற்கு றோட்டு தெற்கு தம்பு நாகலிங்கத்துக்கும், பங்காளருக்குமுடைய ஆதனம் இதனுள்ளிருக்கும் கற் கட்டடங்களும் வீடுகளும் தெற்கெல்லையிலிருக்கும் கிணற்றிற் பங்கும் இதடங்கலும்.
3. கோப்பாய் கோவிற்பற்று, கோப்பாய் தெற்கிறை கல்கொண்டான் நி. ப. 4 குளி. 8 வீடும், பனையும், செய் பயிரும்-எல்லை: கி- சண்முகத்தின் உரிமைக்காரருடைய ஆதனம். வ-பொன்னுவுக்குடைய ஆதனம். மே- ஒழுங்கை. தெ- ஒழுங்கை இதடங்கலும்.
4. வலி. வடக்குப் பகுதி தெல்லிப்பழைக் கோயிற்பற்று தெல்லிப்பழை இறை புலையன்வளவு நி. ப. 20: கல்வீடும், கிணறும், செய் பயிர் வான் பயிர்களும். எல்லை: கி- கனகசபை சங்கரப்பிள்ளைக்கும், மறு பேருக்குமுடைய ஆதனங்கள். மேற்கும் தெற்கும் கதிரிப் பிள்ளை கை. பெண் வள்ளியம்மைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனங்கள். வட- வீரபத்திர சுவாமி கோவிலுக்கும், மறுபேருக்குமுடைய ஆதனம். இதனுள் வட பக்கத்திலிருக்கும் கல்வீடு நிந்தமாக மற்றைய வீடுகள் பிற நீங்கலாகவுமிதடங்கிய சொரியலாய் நி. ப. 3. குளி 11.
5. வண்ணார் பண்ணைக் கோயிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கு இறை குருந்தடி நி. ப. 6. குளி 14. செய்பயிர். எல்லை: கி-செல்லப்பா பெண் ஆச்சிக்குட்டிக்குடைய ஆதனம். வ- ஒழுங்கையும் றெயில் றோட்டும், மே- வேலாயுதர்பெண் பாறுபதிக்கும், மறுபேருக்குமுடைய ஆதனம். தெ- சின்னத்தம்பி பெண் செல்லத்துக்குடைய ஆதனம் இதடங்கலும்.
6. ஷெ இறை பாதிரித்திடல் நி. 2 குளி 4. செய்பயிர் கிணறு, கட்டடங்களும். எல்லை: கி. தெ- றோட்டும், மே- வ- சங்கரலிங்கம் செட்டி முத்தையா செட்டியாருக்கும், பங்காளருக்கும் உடைய ஆதனம் இதடங்கலும்.

வரி மதிப்பீட்டு இல: 73, 75, 79, 81, 83, 85—மின்சாரநிலைய வீதி
வரி மதிப்பீட்டு இல: 47, 49, 51, 53, 55, 57, 59, 61, 63, 65— கஸ்தூரியார் வீதி

7. கோப்பாய் கோயிற்பற்று, கோப்பாய் வடக்கு இறை கொக்கன்புலம் நி. ப. $30\frac{1}{2}$. எல்லை: கி- நீர்வேலி ஊரெல்லை ஆதனம். வ- கோப்பாய் தெற்கு ஊரெல்லையாதனம். மே- சண்முகம் பெண் சின்னாச்சிப் பிள்ளைக்கும், மறுபேருக்குமுடைய ஆதனம். தெ- நாகேந்திரன் சிவசம்புவுக்குடைய ஆதனமும் பாதையும் இதடங்கலும்.
8. ஷெ இறைவறுத்தலையும், மறு பிரிவுகளும் நெ. ப $6\frac{1}{2}$ எல்லை: கி- சிவசம்பு பெண் சிதம்பரத்துக்குரிய ஆதனம். வ-நாகேந்திரன் சிவசம்புவுக்குடைய ஆதனம். மே-விநாசித்தம்பி வேலுப்பிள்ளைக்குடைய ஆதனம். தெ-ஆறுமுகம் அம்பலவாணருக்குடைய ஆதனம். இதனுள்ளிருக்கும் கிணற்றின் பிறப்பங்கு நீக்கி இதடங்கலும்.
9. ஷெ இறைவராம்பற்றை வயல் நெ. ப. 23. எல்லை: கி-கந்தையா கைம்பெண் வள்ளியம்மைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வ- பொன்னம்பலம் கைம்பெண் சிவகங்கைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மே-பிள்ளையார் கோயிலுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெ-குளமும் மறுபேருக்குமுடைய ஆதனம். இதடங்கலும்.
10. ஷெ இறைவறுத்தலை வயல் நெ. ப. $4\frac{1}{2}$, எல்லை: கி-இராசையா பெண் சிவகாமிப்பிள்ளைக்குடைய ஆதனம். வட - குளமும் சின்னத்தம்பி கனகசபைக்குடைய ஆதனம். மே-சிவசம்பு பெண் சிதம்பரத்துக்குடைய ஆதனம். தெ-சபாபதிக்குருக்கள் பெண் இராசம்மாவுக்குடைய ஆதனம். இதடங்கலும்.
11. ஷெ இறை அத்திபடி நெ. ப. 16. எல்லை: கி-ஆறுமுகம் சின்னையாவுக்கும் பங்காளிகளுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனங்கள். வட-சின்னப்பு பெண் சின்னாச்சிக்குடைய ஆதனம். மே-ஆதி வயிரவசாமி கோயிலுக்குடைய ஆதனமும் வாய்க்காலும். தெ-செல்லப்பா முத்துக்குமாருவுக்கும் பங்காளருக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இதடங்கலிற் சொரியலாய் அரைவாசியும்.
12. ஷெ இறை பலாமணவுடை நி. ப. 28. எல்லை; கி-வட-மே-தெ-செல்லப்பா முத்துக்குமாருவுக்கும் பங்காளருக்குமுடைய ஆதனங்கள். இதடங்கலில் சொரியலாய் 2/5 உம் அதற்குள்ளிருக்கும் கிணறும்.
13. ஷெ இறை பலாமண் அடையும் நவுகொல்லையும் நி. ப. 37 3/4. பனைகளும், எல்லை: கி-தெ- ஒழுங்கை. மே-இராசையா பெண் சிவகாமிப்பிள்ளைக்குடைய ஆதனம். வ-செல்லப்பா முத்துக்குமாருவுக்கும் பங்காளருக்குமுடைய ஆதனம். இதடங்கலிற் சொரியலாய் 1/6 பங்கும் தெற்கெல்லை ஒழுங்கையிலிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்காற் பாவிப்புரிததும்.
14. ஷெ இறை பலாமணவுடை நி. ப. 19. எல்லை: கி-நாகேந்திரன் சிவசம்புவுக்குடைய ஆதனம். வடக்கு செல்லப்பா முத்துக்குமாருவுக்குடைய ஆதனம். மே-தெ-செல்லப்பா முத்துக்குமாருவுக்கும் பங்காளருக்குமுடைய ஆதனம். இதடங்கலும்.
15. ஷெ நீர்வேலி இறை மாதிகாடு நெ. ப. 18, எல்லை: கி-தெ- நா. சிவசம்புவுக்குடைய ஆதனம். மே-சீனியர் பொன்னையாவுடைய உரிமைக்காரருடைய ஆதனம். வ-முதலித்தம்பி, பெரியதம்பி இதடங்கலும்.
16. பச்சிலைப்பள்ளி பகுதி புலோப்பளைக் கோயிற் பற்று பெரியபனை இறை செட்டியகாடு ஏக்கர் 99, றூட் 1, பேச்செஸ் 23. எல்லை: கி- றோட், வட-மணற்றெரு மறுபேருக்குமுடைய ஆதனம். மே-அலோசியஸ் மாக்கிறட் முத்தம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனங்கள். மே-மணற்றெருவும் முடிக்குரிய ஆதனமும் இதடங்கலும்.
17. புலோப்பளை இறை நாச்சிமாசோலைக்காடு ஏக்கர் 41, பேச்செஸ் 54. எல்லை: கி-பளையிலுள்ள குடியானவர்களுக்கென்று சொல்லுமாதனம், வட-மணல்தெரு மே, தெ-அலோசியஸ் மாக்கிறட் முத்தம்மாவுக்குரிய ஆதனம் இதடங்கலும்.
18. ஷெ இறை அத்தாயப்பாலிகாடு அல்லது அரசடி தோட்டம் ஏக்கர் 27 றூட் 2. பே. 13. எல்லை: கி-சங்கரப்பிள்ளைக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம். வட - ஈ. எஸ். டபிள்யு சேனாதிராசாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனங்கள் மே-ஒழுங்கையும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெ - முருகர் கனகசபைக்குடைய ஆதனம். இதடங்கலும்
19. முகமாலைக் கோயிற்பற்று வேம்பொடுகேணி இறை குறிச்சிலைபணியிலைக் காடு ஏக்கர் 57. றூட் 2. பே. $17\frac{1}{2}$. எல்லை: கி-சி, எக், பிறிற்றோவுக்குடைய ஆதனம். வ-மணற்றெரு, மே - எனக்குடைய ஆதனம், தெ - சி, எம், பிறிற்றோவுக்குடைய ஆதனம் இதடங்கலும்.
20. வலி, வடக்கு மயிலிட்டிக் கோயிற்பற்று, வயாவிளான் இறை மயிலன் பற்றை -நி. ப. 10. குளி 8 பயிர்களும். எல்லை: கி- ஒழுங்கை, வட - சின்னட்டி வைரவிக்கும் பங்களாருக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், மே - முதலியார் பெண் ஆச்சிப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுடைய ஆதனம். மே - ஐயம்பிள்ளை சின்னையாவுக்கும் பங்காளருக்குமுடைய ஆதனம். தெற்கு ஐ. சின்னையாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம் இதடங்கலிலும் சொரியலாய் அரைவாசி.
21. ஷெ இறை நிற்கசிட்டி நி. ப. 9 குளி $11\frac{1}{2}$ எல்லை: கி - அடிப்பாதை வட - செல்லப்பா பெண் தெய்வானைப்பிள்ளைக்குடைய ஆதனம், மே-வீரசிங்கம் கை. பெ. நாகமுத்துவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், தெ. நன்னியர் முத்துப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனங்கள். தெ-இதடங்கலிற் சொரியலாய் அரைவாசியும்.
22. ஷெ இறை விடத்தல்கட்டையடி நி. ப. 7 குளி $9\frac{1}{2}$. எல்லை: கி. பொன்னம்பலம் - மகள் சின்னத்தங்கத்துக்கும் பங்காளருக்குமுடைய ஆதனம். வட- வேலுப்பிள்ளை மகள் கதிராசிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மே- ஆறுமுகம் பெண் சின்னக்குட்டிக்கும் மறுபேருக்கும். தெ- கந்தவனம் பெண்- ஆச்சிப்பிள்ளை இதடங்கலில் சொரியலாய் 2/3.
23. ஷெ இறை வடுக்கம்புரை நி. ப. 34 குளி 5. எல்லை: கி- றோட்டு, வட- ஐயம்பிள்ளை சின்னையாவும் மறுபேரும். மே- இராசசிங்கர் வேலுப்பிள்ளைக்கும் மறு பேருக்கும். தெ- சங்கரப்பிள்ளை சின்னக்குட்டியும் மறுபேரும். இதடங்கலிற் சொரியலாய் 1/8.
24. புத்தூர் வடக்கு இறை திர்த்தானெல்லை நி ப. 30 குளி 11. பனைகளும் வடலிகளும், பயிர்களும். எல்லை: கி- றோட்டு வட- ஒழுங்கை, மே -சுப்பிரமணியம் சிற்றம்பலமும் மறு பேரும். தெ- ஆவரங்கால் ஊரெல்லை இதடங்கலிற் சொரியலாய் 1/8.
25. ஷெ இறை கட்டாடிசீமா வீடும் நிலமும் பரப்பு 3 குளி $2\frac{1}{2}$. கிழக்கு எல்லை: சுப்பிரமணியம் மயில்வாகனமும் மறு பேரும. வட- சுப்பிரமணியம் சிற்றம்பலமும் மறு பேரும். மே- ஆவரங்கால் ஊரெல்லையும் மறு பேரும். தெ- ஆவரங்கால் ஊரெல்லை இதடங்கலிற் சொரியலாய் 1/6 மேற்கெல்லைக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் வழி வாய்க்காற் பாவிப்புரித்தும்.

ரவி & ராஜ் புடைவை மாளிகை
77, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

விஸ்ணு பவன்
சைவ உணவகம்
350, K. K. S. வீதி,
யாழ்ப்பாணம்.

விக்னேஸ் ரெக்ஸ்
45, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-4704)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## குருநாகல் குண்டு!

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தின் வயது நான்கு சகாப்தங்கள் எனலாம். இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு அவ்வப்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன; ஆனால் அவை தோல்வி கண்டுவிடுவதே வழமை என்றாகிவிட்டது.

சில இடைவெளிகளின் பின்னர் தீர்வு முயற்சிகள் ஆக்கபூர்வமான வையாக மாறக்கூடும் என்ற மன எண்ணமும் தோற்றுவிக்கப்படுவது உண்டு. ஆனால் அவை வெறும் ஹேஸ்யங்களாகவும் பேச்சடிபடுதலாகவுமே முடிவது உண்டு.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு முக்கிய முன் தேவையான அரசாங்கம் — விடுதலைப்புலிகள் சமாதானப்பேச்சுகுறித்து, அதற்கான சாதக நிலை குறித்து, முயற்சிகள் குறித்து இப்போது பலமாகப் பேசப்படுகிறது.

விடுதலைப் புலிகள் அணிசேரா அமைப்பின் தலைவர்களுக்கு அனுப்பிய மகஜர், அரசமைப்பு விவகார அமைச்சர் சென்னையில் தெரிவித்த கருத்துக்கள் என்பன ஊகங்களுக்கு ஓரளவு வலுவூட்டின.

விடுதலைப்புலிகளுடன் நிபந்தனையின்றிப் பேச வேண்டும் அதற்கு ஒத்தழைப்பு வழங்கப்படும் என்ற எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக் கட்சியின் அறிவிப்பும் பேச்சுவார்த்தைக்கு காற்று வீசக்கூடும் என்று மக்களை நம்ப வைத்தது!

ஆனால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குருநாகலில் சுதந்திரக் கட்சியின் மாவட்ட மாநாட்டில் ஆற்றிய உரை அந்த எதிர்பார்ப்பைச் சிதறச் செய்துள்ளது!

பிரிவினையும், போராட்டமும் கைவிடப்படும்என்று விடுதலைப்புலிகள் வாக்குறுதி அளித்தால் மட்டுமே அதிகாரப் பரவல் குறித்து விடுலைப்புலிகளுடன் பேசுவதற்கு அரசு முன்வரும்- என்ற சக்தி வாய்ந்த நிபந்தனைக் குண்டைச் சந்திரிகா தூக்கிப் போட்டிருக்கிறார்!

இப்படி ஒரு முன் நிபந்தனையை ஏற்றுப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வர மாட்டார்கள் என்பது சந்திரிகாவுக்கு மட்டுமல்ல, இனப்பிரச்சினைத் தீர்வில் ஆர்வமுள்ள எல்லோருக்குமே தெரிந்த ஒன்று.

அவ்வாறிருக்க சந்திரிகா இப்படி ஒரு நிலையை அணைத்துக் கொள்வது விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தையில் கொண்டுள்ள நாட்டத்தை, விருப்பத்தை திசைதிருப்புவதற்கே. மாற்றுவதற்கே. பேச்சுவார்த்தைக்குத் தடைக்கல் போடுவதற்கே.

இதனை இன்னொரு கோணத்தில் பார்த்தால் இனப்பிரச்சினையை முன்னிறுத்தி போரைத் தொடர்வதே சந்திரிகாவின் – அரசின் – வேலைத்திட்டமாக உள்ளது என்பது மிக வெளிச்சம்.

சந்திரிகாவின் குருநாகல் பேச்சு தேர்தல் மேடைப் பேச்சு வகையினதாகும். பரபரப்பை உண்டுபண்ணி வாக்குகளைக் கவர்ந்து கொள்ள முயலும் தந்திரம். இத்தோடு பேச்சுவார்த்தைச் சாத்தியக் காற்றுக் கலைகிறது.

# பண்டத்தரிப்புப் பொதுச் சந்தை

# ரூ. 38 லட்சம் செலவில் புனரமைப்பு

யாழ்ப்பாணம், செப். 10

பண்டத்தரிப்பு பொதுச் சந்தை 38 லட்சம் ரூபா செலவில் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையினால் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இதற்கான நிதியுதவியை ஐ. நா. அபிவிருத்தித்திட்ட நிறுவனத்தின் யாழ்ப்பாண புனர்நிர்மாண மீள் குடியேற்றத் திட்டம் வழங்குகின்றது.

கடந்த கால யுத்தத்தால் பாதிக்கப்பட்டு மோசமாகச் சேதமடைந்துள்ள இந்தச் சந்தையைப் புனரமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மீள நிர்மாணிக்கப்படும் இந்தச் சந்தையில் குழாய் நீர்வசதிகளும் ஏற்படுத்தப்படும்.

புனரமைப்பு வேலைகள் பூர்த்தியானதும் எதிர்வரும் ஜனவரி மாதம் தைப்பொங்கல் தினத்தன்றுசந்தையைத் திறந்து வைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஐ-6)

## கட்டட வேலைகள்

சுழிபுரம், செப். 9

பனிப்புலம் காலையடிமுருகன் கோயில் புதிய சுற்று மண்டபக் கூரை வேலைகள், சாலையடி அமெரிக்கமிஷன் பாடசாலைக் கட்டட வேலைகள் ஆகியன திருத்தியமைக்கப்பட்டு வருகின்றன.

(இ-28)

## பங்கீட்டு அட்டைக்கு சீனி

உரும்பராய், செப். 10

நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் சகல பங்கீட்டு அட்டைகளுக்கும் 3 கிலோ சீனி, 5 கிலோ நாட்டரிசி ஆகியன கட்டுப்பாட்டு விலையில் வழங்கப்படுகின்றன.

(ஐ-154)

## தருப்பூசி போடவில்லை

அச்சுவேலி, செப். 10

கோப்பாய் கால் நடைவைத்திய பிரதேசத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நாய்களுக்கு விசர்நோய்த் தடைமருந்து நீண்டகாலமாகப் போடப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-11)

## பரிசளிப்பு விழா

பருத்தித்துறை, செப். 9

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரியின் ஸ்தாபன நினைவு தினமும், பரிசளிப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை கல்லூரி மண்டபத்தில் அதிபர் வ. ஆறுமுகம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். பல்கலைக்கழக விலங்கியற் துறைத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் கலந்து கொள்வார்

(இ-8-118)

### தெற்கு மக்களிடையே

# புரிந்துணர்வை ஏற்படுத்த ஆசிரியர் மூலம் பிரசாரம்

கொழும்பு, செப். 10

கொழும்பில் இயங்கும் தேசிய ஒருமைப் பாட்டுச் செயற்றிட்டப் பிரிவு இனப் பிரச்சினைத் தீர்வுக்கு வழிவகுக்கும் ஒரு புதிய முயற்சியில ஈடுபட்டுள்ளது.

தென்பகுதியைச் சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள் சிலர் கொழும்பிற்கு அழைக்கப்பட்டு கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் அவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்ட பின்னர் தென்னிலங்கையில் சிங்கள மக்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்த இவர்கள் மூலம் பிரசாரம் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வகையில் பயிற்சியளிக்கப்பட்ட முதலாவது குழு கடந்த திங்கட்கிழமை வெளியேறியது. தொடர்ந்து இது போன்று குழுக்கள் பயிற்சியளிக்கப்பட்டு அனுப்பப்படவுள்ளன.

(ஐ-154)

## நல்லூர் ஓய்வூதியருக்கு

யாழ்ப்பாணம், செப். 10

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு இம்மாத ஓய்வூதிய பற்றுச்சீட்டுடன் விவரத்திரட்டு படிவங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்று பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

இந்தப் படிவங்களைப் பூர்த்தி செய்து தமது பிரிவு கிராம சேவையாளர் அல்லது அரச, கூட்டுஸ்தாபன பதவிநிலை அதிகாரி அல்லது ஓய்வூதியம் பெறும் வங்கியின் முகாமையாளர் முன்னிலையில் ஒப்பமிட்டு அந்த அதிகாரியின் சிபார்சுடன் பிரதேச செயலக ஓய்வூதியக்கிளையில் நேரில் ஒப்படைக்க வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார்.

(உ-3)

## பாத்திரங்கள் அன்பளிப்பு

தென்மராட்சி, செப். 9

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள குடும்பத் தலைவரை இழந்த இளம் விதவைகளுக்கு யுனிசெப் நிறுவனத்தினரால் அலுமினியப் பாத்திரங்கள், பாய், தலையணை ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன.

அந்தந்தப் பிரிவு கிராம அலுவலரால் தெரிவு செய்யப்பட்ட இளம் விதவைகளுக்கான பொருள்கள் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

# பேச்சுக்கு ஊக்கமளிக்க அஷ்ரப்பிடம் கோரிக்கை

கொழும்பு, செப். 10

அர்த்தமற்ற யுத்தத்தை நிறுத்த அரசாங்கமும்— விடுதலைப்புலிகளும் பேச்சுக்களை ஆரம்பிக்க ஊக்கம் கொடுக்குமாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப்பிடம் கோரிக்கை விடுத்தனர்.

அமைச்சர் அஷ்ரப்புடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான இராமேஸ்வரனும், இராமமூர்த்தியும் பேச்சு நடத்திய சமயமே இக்கோரிக்கையை விடுத்தனர்.

அவர்கள் முன்வைத்த முக்கிய கோரிக்கைகள் வருமாறு—

★ காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவேண்டும். அத்துடன் வேலையற்ற இளைஞர்களுக்கு அங்கு வேலை வழங்க வேண்டும்.

★ பன்முகப்படுத்தப்பட்ட வரவு – செலவுத்திட்டத்தின் கீழ் எமக்கு ஒதுக்கப்பட்ட நிதி எமது திட்டங்களுக்கு கிடைக்கவில்லை. இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் அஷ்ரப் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும்—

வேலைவாய்ப்புக் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும் என்றும்— தெரிவித்தார்.

(ஐ-3-21)

## நாளை

ஆவணி - 26

வெள்ளிக்கிழமை

திதி: பஞ்சமி

காலை 06 08 வரை.

ஷஷ்டி பின்னிரவு 3.49 வரை

நட்சத்திரம்: பரணி

முற்பகல் 10.54 வரை:

கார்த்திகை விரதம்

சுபநேரம்: 06.03 -07.33

ராகுகாலம்: 10.33 - 12.03

(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

## உதயவாக்கு

யாரேனும் குறை கூறினால் அது உண்மையாக இருந்தால் உன்னைத் திருத்திக்கொள். பொய்யாக இருந்தால் [illegible] படித்தாமல் விட்டுவிடு.

- எபிக்டெடஸ்

## வாசகர் திருமுகம்

## நூலகம் அதே இடத்தில் இயங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

அண்மையில் வந்த பத்திரிகைச் செய்தியின்படி வடமராட்சி கிழக்கு பிரதேச சபை நூலகம் இராணுவக்கட்டுப்பாடுடைய தொடர்பாடல், போக்குவரதது வசதி நிறைந்த மருதங்கேணிப் பிரதேசத்துக்கு இடமாற்றப்படவுள்ளதாக அறிந்த செம்பியன்பற்றுப் பகுதி மக்கள் பெரும் வேதனை அடைந்துள்ளனர். ஏற்கனவே பாதிக்கப்பட்ட மக்கள் வடமராட்சி கிழக்கு பிரதேச சபையின் இச்செயல் தமக்கு 'வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது'' போன்று வேதனையைத் தருவதாகத் துன்பப்படுகின்றனர்.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் வாழும் மக்கள் அன்றாடத் தேவைகளைக்கூட பூர்த்தி செய்ய முடியாத நிலையில் வாழ்க்கை நடத்துகிறார்கள். நாகர் கோயிலுக்கும், தாளையடிக்கும் இடைப்பட்ட பிரதேசமான குடாரப்பு, மாமுனை, செம்பியன்பற்று ஆகிய பகுதிகள் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளாகவே காணப்படுகின்றன.

இங்கு பொருள்களுக்கு பெருந் தட்டுப்பாடும் நிலவுகிறது. உதாரணமாக செய்திகளைக் கேட்பதற்கு பற்றறி கூட வாங்கமுடியாதுள்ளது.

ஜி. சீ. ஈ. உயர்தரம் மற்றும் சாதாரணதர வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகள் இங்கு உள்ளன. தமது எதிர்காலம் சிறப்பாக அமையவேண்டுமென்ற காரணத்தினால் வளங்கள் ஏதுமற்ற நிலையிலும் பல மாணவர்கள் தமது கல்வியை இடைவிடாது தொடர்ந்து வருகின்றனர். இம் மாணவர்களுக்கும், பெற்றோருக்கும் உள்ளூர், வெளியூர்ச் செய்திகளை அறிவதற்கு பெரும் துணையாக அமைவது வடமராட்சிகிழக்கு பிரதேசசபை நூலகமாகும்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்நூலகத்தை இதே இடத்தில் இயங்கச்செய்ய வேண்டுமென்பதே இப்பகுதி மக்களின் பேரவா. இந்த நூலகம் மட்டுமே இப்பிரதேச மக்களின் அறிவுவளர்ச்சிக்கு முதுகெலும்பாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பார்களா?

கி. அம்பிக்குமார்.

(பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில்)

செம்பியன்பற்று.

## சாயி சிந்தனை

தியாகம் மிக அவசியம். தியாகத்தை விடச் சிறந்த பண்பு வேறெதுவுமில்லை. தியாகத்தின் மூலம் எதையும் அடைய முடியும். வாழ்க்கையில் பல பொருள்கள் இல்லாமல் வாழ முடியும்; ஆனால் மூச்சு இல்லாமல் வாழ இயலாது. மூச்சை உள்ளே இழுத்தால், அதை வெளியேற்றவும் வேண்டும். உணவை உட்கொள்கிறாய்; பிறகு அதை வெளியேற்றாவிடில், நோய்வாய்ப்படுவாய். இரத்தம் இடைவிடாமல் ஓரிடத்தில் நில்லாமல் சுழன்று கொண்டே இருககிறது. இல்லாவிடில் இரத்தம் நஞ்சாகி, கட்டிகள் புறப்படும். இவ்வாறு இரத்த ஓட்டம் இருப்பதுதான், உடல் நலத்துக்கு அறிகுறி. இரத்தமும் பணமும் சுழன்று கொண்டே இருக்க வேண்டும். தண்ணீர் கூட தேங்கியிருந்தால், அதில் புழுக்கள் மலிந்து விடுகின்றன. பணத்தை நேரான வழியில் பயன்படுத்த வேண்டும். பல வகை சொத்துககளும், பணத்தாசையும் வீணானதாகும். பணத்தை நேரான வழியில் செலவழிக்காவிடில்; அதைத்தரைக்கடியில் புதைத்து வைத்ததற்குச் சமம்.

ஆதாரம்: சாயி அருளமுதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கச்சேரி — நல்லூர் (மூத்த விநாயகர் கோயிலுக்கு அண்மையில்) பிரதான வீதியில் 4½ பரப்பு குடியிருப்பு நிலம் கற்கட்டுக் கிணற்றுடன் உடனடி விற்பனைக்கு உண்டு. இ. சங்கர், பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (58870)

## மணமகள் தேவை

பயிற்றப்பட்ட ஆசிரியரும், பட்டதாரியும் திருவோண நட்சத்திரம், கிரக பாவம் 13¾ வயசு 34, செவ்வாய் தோஷ மற்ற மணப்பெண் தேவை. தொடர்பு: கு. திருவிளங்கம், மாங்கல்யா மல்ற்ரி சேவிஸ், 3ஆம் கட்டையடி, வாசிக சாலை ஒழுங்கை, கல்வியங்காடு. (59042)

63ஆம் ஆண்டு R. C. அமெரிக்காவில் நிரந்தரமாக வசிக்கும் மணமகனுக்கு (தற்பொழுது இங்கு உள்ளார்) மணமகள் தேவை, உடன் தொடர்பு கொள்ளவும் அழைத்துச் செல்வார். துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் றோட், யாழ்ப்பாணம். (59059)

## ஆங்கிலம்

ஆண்டு 9, 10, 11 ஆங்கில மொழி இலக்கிய வகுப்புகள் ஆரம்பமாகி விட்டன. ஆண்டு 7, 8 ஆங்கிலமொழி வகுப்புகள் 11—09—98 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றன. தொடர்பு: கோ. சுப்பிரமணியம், இல. 62, பழம் வீதி, கந்தர்மடம். (59052)

## ஆங்கிலம் விசேடமாக

O/L 98 இல் Credit Distinction பெறுபேறுடைய G A Q. வெளிவாரி (Spoken English) B.Sc. London, Inter ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோயிலடி. சிவன் கோயில் மேற்கு வீதி. திருநெல்வேலி. (59011)

## யாழ்ப்பாணம்

ஒரு நாடகத்திற்கு பத்தாயிரம் ரூபா பரிசு பெற்ற அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள் (1) யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடக நூல் (2) யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் இடம்பெயர்வின் கதை ரூபா 50. (59063)

## தவறிவிட்டது

சரவணமுத்து சித்திரா தேவி, முத்துமாரி அம்மன் கோயிலடி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி என்ற பெயர் விலாசமுடைய எனது விசேட அடையாள அட்டை நாவற்குழிக்கு அண்மையில் தனியார் பஸ் ஒன்றில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி சுமங்கலி புடைவைக் கடையில் ஒப்படைக்கவும். (சி/4807)

சாந்தினி ஜெயந்திரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (468660025OV), விசேட அடையாள அட்டையும் கடந்த (07—09—98) திங்கட்கிழமை அன்று கச்சேரியில் இருந்து யாழ். பஸ் நிலையத்துக்கு பஸ்ஸில் பிரயாணம் செய்யும் போது தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 138/8, கோயில் வடக்கு வீதி, நல்லூர் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (59062)

## தேவை

தரமான நல்ல நிலையில் உள்ள கோட், சூட், ரை முதலியவை தகுந்த விலைக்கு வாங்கப்படும். தொடர்பு கட்கு: பா. நிர்பாணந்தன், 163, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (59034)

---

உ

வடலியடைப்பு – புதறானை

# அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான

மஹாகணபதிஹோமப் பெருவிழா நவோத்ரசகஸ்ரகலச (1009)

# சங்காபிஷேக விஞ்ஞாபனம்

### கிரியா கால விவரம்

**ஆவணி மாதம் 25ஆம் நாள் (10 - 09 - 1998) வியாழக்கிழமை**

மாலை பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகும்.

**ஆவணி மாதம் 26ஆம் நாள் (11 - 09 - 1998) வெள்ளிக்கிழமை**

காலை விநாயக வழிபாடு, விசேட சந்தி, பூதசுத்தி யாகபூஜை, அக்னி முகாந்தம், விசேட திரவ்ய அபிஷேகம், விசேட திரவ்ய ஹோமம், மஹா கணபதி ஹோமம், மஹா பூர்ணாகுதி தீபாராதனை, சர்வ மங்கள வாத்திய சகிதம் பிரதான கும்பம் வீதிப்பிரதட்சணம்,

முற்பகல் 11-00 மணிக்கு மூலகும்பம் அபிஷேகம், உச்சிக்காலைப் பூஜையும் தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதானம்.

மாலை 4–00 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் தொடர்ந்து அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் எம்பெருமான் வீதியுலாவரும் காட்சியும் இடம்பெறும்.

கிரியைகள் யாவும் இந்துமத குரு பீடாதிபதி
கலாநிதி அருள்ஜோதி சிவஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியாரின்
பத்ததிக்கிரமங்களுடனும் பரிபூர்ண ஆசிகளுடனும் நிகழும்.

ஆசியுரை வழங்குபவர்: பேராசிரியர் கலாநிதி
பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ண ஐயர்

சர்வபோதகர்: கிரியா முக்தாமணி
சிவஸ்ரீ ஜம்புகேஸ்வர மஹேஸ்வரக் குருக்கள் (சுதுமலை)

பிரதான சிவாச்சார்யார்: சிவாகம கிரியாரத்னம் ஈசான சிவாச்சார்யார்
சிவஸ்ரீ சிவா நித்தியானந்தக் குருக்கள் (ஷெ ஆலய பிரதமகுரு)

### ஏனைய குருமார் விவரம்

சிவஸ்ரீ சி. சோமசுந்தரக் குருக்கள் (வில்லூன்றி விநாயகர் கோயில்)
சிவஸ்ரீ கி. நாராயணக் குருக்கள் (சதிரேசன் கோயில்)
சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக் குருக்கள் (யாழ்ப்பாணம்
சிவஸ்ரீ க. பாஸ்கரக்குருக்கள் (வண்ணை)
சிவஸ்ரீ ஸ்கந்த பாலசுப்பிரமணியக் குருக்கள் (மண்டைதீவு)
சிவஸ்ரீ க. சிவசுப்பிரமணியக் குருக்கள் (அராலி)
சிவஸ்ரீ க. சிவமூர்த்திக் குருக்கள் (சுன்னாகம்)

சாதகர் பிரம்மஸ்ரீ நித்திய சிவதாண்டவ சர்மா (ஷெ ஆலயம்)
பிரம்மஸ்ரீ நித்திய சிவானந்த சர்மா
பிரம்மஸ்ரீ நித்திய விஜயானந்த சர்மா

### விசேட மேளக் கச்சேரி

மீ. கோவிந்தசாமி குழுவினர் (வடலியடைப்பு)
N. ஜெயராமன் குழுவினர் (வடலியடைப்பு)
V. K. கானமூர்த்தி குழுவினர் (கோண்டாவில்)
K. பழனிமலை குழுவினர் (கைதடி)
N. R. கோவிந்தசாமியின் புதல்வர் (இணுவில்)
K. சிவகுமார் குழுவினர் (நாச்சிமார் கோயிலடி)
தெட்சணாமூர்த்தியின் மகன் உதயசங்கர் குழுவினர் (அளவெட்டி)
K. R. சுந்தரமூர்த்தி குழுவினர் (இணுவில்)

சின்னமணி குழுவினர் வில்லிசை (அச்சுவேலி)

பூந்தண்டிகை அலங்காரம்: K. தவராசா (சண்டிலிப்பாய்)

இக்காலங்களில் அடியார்கள் மஹா கணபதி ஹோமத்திற்கு வேண்டிய சமித்துவகைகள், திரவியங்கள், பத்திர புஷ்பங்கள், பால், தயிர், இளநீர், நெய் முதலிய பொருள்களை வழங்கி விநாயகப் பெருமானின் கைங்கரியத்தினை சிறப்பாக நடத்தி அவனருள் பெறுவீர்களாக.

- விழா உபயகாரர்

வடலியடைப்பு சித்திவிநாயகர் தேவஸ்தான பரிபாலனசபை. (59029)

---

# கண்ணீர் அஞ்சலி

யா/தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி அதிபர்
மு. சொர்ணலிங்கம்
அவர்களின் அன்புச் சகோதரி

## செல்வி செல்வநாயகி முருகேசு

(3 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை)

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/தந்தை செல்வா தொ. நி. ப,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

[59058]

---

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கணபதி தியாகேசு

(காங்கேசன்சி மெந்துக்கூட்டுத்தாபன மின் பகுதி உயர் உத்தியோகஸ்தர்)

மலர்வு 07 - 01 - 1931 உதிர்வு 31 - 08 - 1988


அன்புத் தந்தையின் ஆத்மா சாந்தியடைய முருகனை வேண்டுகின்றோம்!

மனைவி, பிள்ளைகள்

ஆதியாமலை, உடுப்பிட்டி. (59045)

---

# ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

## அருளானந்தம் சுதாகரன்

(க. பொ. த.) உயர்தரம் – ஹாட்லிக் கல்லூரி.

உதிப்பு 08 - 09 - 1969 உதிர்வு 21 - 08 - 1989

திதி:- 10 - 09 - 1998

ஆண்டு ஒன்பது ஓடி மறைந்தாலும்
கருணை மிகு சுதாவே!
புத்தம் புதிய மலர் போல்
இன்றும் மிளிருதே உன் இன்முகம்!
உன் ஆன்ம சாந்திக்காக இறையருளை வேண்டும்:

பெற்றோர், சகோதர சகோதரிகள்,
மைத்துனர், மருமக்கள்.

திக்கம். (58909)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தக ஊழியர்களுக்கு வாரம் ஒன்றரை நாள் லீவு

யாழ்ப்பாணம், செப். 10

யாழ். வர்த்தக ஊழியர்களுக்கு வாரத்தில் ஒன்றரை நாள் லீவு வழங்குவது தொடர்பாக நேற்று யாழ். மாவட்ட தொழில் திணைக் களத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இணக்கம் காணப் பட்டது.

இக் கூட்டத்தில் யாழ். வணிகர் கழகம், யாழ். மாவட்ட வர்த்தக சங்கங் களின் சமாசம், யாழ். வர்த்தக ஊழியர் சங்கம் போன்றவற்றின் தலைவர், செயலாளர் உட்பட உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

மாவட்ட தொழில்திணைக்கள உதவித்தொழில் ஆணையாளர் சி. சி. அருமைநாயகம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

தொழிலாளருக்குரிய சலுகைகள், உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்தும் தொழிற் சட்டங்கள் குறித்தும் உதவித்தொழில் ஆணையாளரால் இக் கூட்டத்தில் விளக்கமளிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பங்குபற்றிய சங்கப் பிரதிநிதிகளும் தமது கருத்துக்களை தெரிவித்தனர். கூட்டத்தின் இறுதியில் வர்த்தக நிறுவனங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு சனிக்கிழமைகளில் அரைநாள் லீவும், ஞாயிற்றுக் கிழமைகளில் முழுநாள் லீவும் வழங்குவதென இணக்கம் காணப்பட்டது. [இ-5]


**விக்னா**
**கல்வி நிறுவனம்**
99 கலைப் பிரிவு
DAY CLASS
பொருளியல்:
திரு. விக்கி 8 மணி
தமிழ்:
திரு. லிங்கம் 9 மணி
இந்து சமயம்,
இந்து நாகரிகம்:
திரு. பத்மராஜா 7 மணி
புவியியல்:
செல்வி நிர்மலா
10 மணி
நாடகமும்
அரங்கியலும்
திரு மதி 11 மணி
ஆரம்பம்: 14 - 09 - 98
7 மணி.
(59075)



**BOSCO**
**INSTITUTE**
SPOKEN
ENGLISH
By: **BRITTO**
புதிய பிரிவு: 12-09-98
Sat. Sun. 5 – 6
(59085)



உ
சாவகச்சேரி நகர்
அருள்மிகு
**செருக்கல்பதி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய**
**பாலஸ்தாபன விஞ்ஞாபனம்**
10 09 – 1998

10-09-98 வியாழன் காலை 8 40 மணி முதல் 10. 40 மணிவரை வரும் அச்சுவினி நட்சத்திரமும் வெள்ளி ஓரையும் துலாலக்கினமும் கூடிய சுப வேளையில் பாலஸ்தாபனம் நிகழ்வுறும்.

பிரதமகுரு:
''சிவாகம வித்பத்ஜோதி'' ''பண்டிதர்''
ஜெயஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள்
(புன்னாலைக்கட்டுவன்)

ஆலயகுரு: பிரம்மஸ்ரீ இ. சுரேஸ்வர சர்மா
(நுணாவில்)

பாலஸ்தாபன உபயம்:
திருமதி சரஸ்வதி பஞ்சலிங்கம் குடும்பம்,
(லண்டன்)

இ. கருணாகரன்
[தர்மகர்த்தா]

விளம்பர அனுபளிப்பு:-
A. T. குமார்
மொத்த சில்லறை விற்பனை நிலையம்,
சந்தை உட்புறம், சாவகச்சேரி.
(சி/4826)



**A\L நாடகமும் அரங்கியலும் வகுப்புக்கள்**
ஆசிரியர்: க. ஸ்ரீகந்தவேள்

- தெஸ்பியன் கல்வி நிலையம்
  K. K. S. வீதி, இணுவில். சனி, ஞாயிறு
  99 — 8-00 — 9 00 மணி
  2000 — 10-00 — 11-00 மணி
- C. C. A. யாழ்ப்பாணம்.
  99 — 11-00 — 12-00 மணி
  2000 — 12-00 — 01-00 மணி
- சுப்ரா கல்வி நிலையம்
  சித்தன்கேணி. 99 — 3-30 — 4-30 மணி
  2000 — 4-30 — 5-30 மணி
- கலைமணி கல்வி நிலையம்
  மானிப்பாய். திங்கள், புதன்
  99 — 3-30 — 4-30 மணி
  2000 — 4-30 — 5-30 மணி

அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
(59079) – நிர்வாகிகள்


# செம்மணி குறித்து உரிய முறையில் தென்பகுதியில் பிரசாரம் வேண்டும்

## அரசசார்பற்ற நிறுவன இணையம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 10

''தென்னிலங்கையிலுள்ள தொடர்புச் சாதன ஊடகங்கள் செம்மணிப்புதைகுழி விவகாரத்தில் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்கின்றன. எனவே இந்த விவகாரத்தினை உரிய முறையில் தென்பகுதியில் பிரசாரம் செய்ய வேண்டும்.''

இவ்வாறு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் தேசிய சமாதானப்பேரவைப் பணிப்பாளர் ஜெகான்பெரேராவுக்கு அனுப்பிவைத்துள்ள பக்ஸ் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணத்தில் செம்மணிபுதைகுழி விவகாரம் தற்போது எரியும் பிரச்சினையாக எழுந்துள்ளது. கிருஷாந்தி கொலை வழக்கில் எதிரியான சோமரத்தின ராஜபக்ஷ தெரிவித்த விடயமானது செம்மணி புதைகுழிகளிலுள்ள உடல்கள் தமது குடும்பத்தவர்களுடையதாக இருக்கலாமென்று காணாமல் போனோரில் ஒவ்வொரு குடும்பங்களையும் எண்ண வைத்துள்ளது. இதனால் இந்தக்குடும்பங்கள் உளரீதியாக பெரும் பாதிப்பை அடைந்துள்ளன.

காலம்கடந்த நடவடிக்கையாக இருந்தாலும் மனித உரிமைகள் ஆணைக்குழு சில செயற்பாடுகளைச் செய்துள்ளது. ஆனால் அரசாங்கம் இந்த விடயத்தில் அக்கறையின்றி இருப்பதாக மக்கள் சந்தேகிக்கிறார்கள்.

பட்டலந்த சூரியகந்த புதைகுழி விவகாரத்தில் இன்றைய அரசு பெரும் ஆரவாரத்துடன் நடவடிக்கையில் ஈடுபட்டது ஆனால் செம்மணி விடயத்தில் மட்டும் ஏனோ தானோ என்ற நிலை காணப் படுகின்றது.

கடந்தவாரம் இரவுவேளைகளில் செம்மணிப் பகுதியில் வாகன நடமாட்டம் காணப் பட்டதாகவும், அங்குவெளிச்சம் தெரிந்ததாகவும் மக்கள் பேசிக் கொண்டனர்.

மழைகாலம் நெருங்கிக் கொண்டிருப்பதால் அதற்கு முன் புதைகுழிகள் விடயத்தில் நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும். இல்லாவிட்டால் மழை வெள்ளம் காய்ந்து அடுத்த கோடை வரையும் புதைகுழி தோண்டுவதற்காகக் காத்திருக்க வேண்டிய நிலையேற்படும்.

இந்த விவகாரம் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் ஆறு அமைப்புகள் கூடி மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்த தீர்மானங்களையும் அறியத் தருகின்றோம்.

செம்மணிப்பிரதேசத்திற்கு எவரும் செல்லாதவாறு பாதுகாப்பு வழங்க வேண்டும். அங்குள்ள எச்சங்கள் மாறுபடாதிருக்கும் வகையில் இப்பாதுகாப்பு அமைய வேண்டும்.

பாதிக்கப்பட்டோரின் நம்பிக்கையைப் பெறுவதற்கு நீதி விசாரணையின் போது மனித உரிமையைமதிக்கின்ற நிறுவனங்களை உள்ளடக்கிய குழு ஒன்று நியமிக்கப் பட வேண்டும்.

மழை காலத்துக்கு முன் இது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

எல்லாவற்றிலும் நிபுணத்துவம் மிக்கவர்களின் சேவைகளும் முறையான உபகரணங்களும் அகழ்வு வேலைகளுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும்.

உடல்களை உரிய முறையில் அடையாளம் காண்பதற்கு உரிய நிபுணர்களின் உதவியைப் பெறவேண்டும்.

இப்படி மேலும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# பருத்தித்துறை இருளில்

யாழ்ப்பாணம், செப். 10

பருத்தித்துறைப் பகுதி கடந்த ஒரு வாரகாலமாக மின்சாரம் இன்றி இருளில் மூழ்கி வருகிறது.

இப்பகுதியில் இயங்கி வந்த மின்சார இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறே இதற்கான காரணமாகும்.

பழுதடைந்த உப உறுப்பு திருத்த முடியாத நிலையில் இருப்பதாகவும், இதற்கா ஒரு புதிய உப உறுப்பை கொழும்பில் இருந்து தருவிக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாகவும் மின்சார வட்டாரத்தில் இருந்து தெரிய வருகிறது. (இ-15)

## தேசிய பாடசாலை

# ஆசிரியர் வெற்றிடத்துக்கு விண்ணப்பம் கோரல்

கொழும்பு, செப். 10

நாட்டிலுள்ள தேசிய பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்களை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழு கோரியுள்ளது.

அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் இடமாற்றங்களைக் கொண்டு பூர்த்திசெய்யப்பட இருக்கும் இந்த வெற்றிடங்களுக்கு தகுதியான ஆசிரியர்கள் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் அனைத்தும் செயலாளர் அரசாங்க சேவை ஆணைக்குழு கல்விச் சேவைக்குழு இசுறுபாய பத்தரமுல்ல என்னும் முகவரிக்கு அனுப்பப்படல வேண்டும் –

1998 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன் மூன்று வருட சேவையைப் பூர்த்தி செய்த நிரந்தர ஆசிரியர்கள் இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்கலாம். (இ-6)

# 2 ஆயிரம் பேருக்கு மூக்குக்கண்ணாடி வழங்க நல்லூர் லயன்ஸ் கழகம் திட்டம்

யாழ்ப்பாணம், செப். 10

நல்லூர் லயன்ஸ் கழகம் இந்த வருடம் 2 ஆயிரம் பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளை வழங்குவதற்கும் —

25 ஆயிரம் பேருக்கு முறையான கண் பரிசோதனை நடத்துவதற்கும் —

50 ஆயிரம் பேருக்குக் கண்களைப் பாதுகாப்பது எப்படி என்பது பற்றிய போதனைகளை அவர்கள் வசிக்கும் இடங்களுக்குச் சென்று போதிப்பதற்கும் — திட்ட மிட்டுள்ளது.

திருநெல்வேலி இந்து கலாமன்ற சனசமூக நிலைய மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இலவச கண், நீரிழிவு, பல், வாய்ப் புற்றுநோய் ஆகிய மருத்துவப் பரிசோதனைகளில் கலந்துகொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்துப் பேசிய நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் பா. தவபாலன் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

எமது சொத்துக்களில் பெரிய சொத்து கண். அதனைப் பாதுகாப்பதே எமது முதற்கடமை. லயன்ஸ் கழகம் நடத்தும் மாதாந்த கண் பரிசோதனை முகாமில் கலந்துகொண்டு அதில் கூறப்படும் ஆலோசனைகளின் படி ஒழுகுவதே கண்ணைப் பாதுகாக்கச் சிறந்த வழி ஆகும்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சிகிச்சை முகாமில் 110 பேர் இலவச கண்ணாடி பெறத் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேலும் 6 புதிய நீரிழிவு நோயாளர்கள் கண்டு பிடிக்கப்பட்டதுடன் பதிவு செய்த 250 பேருக்குச் சகல மருத்துவப் பரிசோதனைகளும் நடத்தப்பட்டன. (இ-6)

# சமய சந்நிதியில்

யாழ்ப்பாணம் செப். 10

அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தான வருடாந்த உற்சவம் கடந்த 3 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தேர்த் திருவிழாவும், பிற்பகல் 5 மணிக்கு உறியடி உற்சவமும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளன. (ஐ-8-ரீ)

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் சனிக்கிழமை இரவு 12 மணிக்கு ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் இடம்பெறவுள்ளது.

மறுநாள் ஞாயிற்றுக் கிழமை உறியடி உற்சவமும் ஆவணிக் கடைசி ஞாயிறு உற்சவமும் நடைபெறவுள்ளன. (ஐ-8-ரீ)

★ ★ ★

நவாலி, செப். 10

ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்த நயினார் ஆலயத்தில நாளை பி.ப. 3 30 மணிக்கு கார்த்திகைத் திருவிழாவும் மறுநாள் [illegible] கிருஷ்ண ஜெயந்தி விழாவும் இடம்பெறும். (ஐ-100)

# உதவிப்பண அட்டைகள் மீளாய்வு

பளைப்பிரதேசத்தில் மாதாந்த உதவிப் பணம் பெறுவோரின் அட்டைகளை மீளாய்வு செய்யும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர், கிராம அலுவலர் பிரிவுகளுக்கு நேரில் சென்று மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களின் விவரங்களைத் திரட்டி வருகிறார். (ஐ-117)

# கூட்டம்

பயிலுநர் ஆசிரியர் நியமனத்தில் வதிவிட வேறுபாடு காரணமாகப் புறக்கணிக்கப் பட்டோருக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு நல்லை அதீனத்தில் நடைபெறும் என வதிவிட வேறுபாட்டால் பாதிக்கப் பட்டோர் சங்கம் அறிவித்துள்ளது. (இ-27)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மினி திரை அரங்குகளில் ஆபாசப் படங்கள்

## பொலீஸ்அதிகாரிஎச்சரிக்கை

யாழ். குடாநாட்டில் சில மினி திரை அரங்குகளில் ஆபாசப் படங்கள் காண்பிக்கப்படுவதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அது சட்டப்படி குற்றமாகும். அவ்வாறான செயல்களில் ஈடுபடுவோர் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ். பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே. மோகன்தாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் மினி திரையரங்குகள் அதிகரித்து விட்டன.

இந்த மினி திரை அரங்குகள் போட்டிக்காக ஆபாசப் படங்களை பயன்படுத்துவதாகவும், சில மினி திரை அரங்குகள் படங்களுக்கு நடுவில் ஆபாசப் படங்களைப் போட்டுக் காட்டுவதாகவும் எமக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

சமூகத்தைச்சீரழிக்கும் இவ்வாறான செயல்களில் ஈடுபடுவோர் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். அவர்கள் மீது எம்மால் சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியும். இவர்கள் தமது நடவடிக்கைகளை கைவிட்டுவிட வேண்டும்.

எமக்கு இவ்வாறான முறைப்பாடுகள் இனிமேல் கிடைத்தால் சம்பந்தப்பட்ட மினி திரை அரங்கு உரிமையாளர்கள் கைது செய்யப்படுவதுடன் அவர்களின் திரை அரங்குப் பொருள்களும் பறி முதல் செய்யப்படும். திரையரங்கும் சீல் வைக்கப்படும். கைது செய்யப்படுபவர் நீதி மன்றில் நிறுத்தி தண்டனை வழங்கப்படுவார்.

இவ்வாறான செயல்களில் ஈடுபடுவோர் தொடர்பாக மக்கள் எமக்குத் தகவல்கள் வழங்க வேண்டும்.

இப்படி அவர் கேட்டுக் கொண்டார். (இ-9)

### பெண்…

(முதலாம் பக்கத் தொடர்)

யைப் பறித்துக் கொண்டு தப்பி ஓடினர். இது தொடர்பாக விசாரணை நடத்திய பொலீஸார் அந்நபர்கள் இருவரையும் கைது செய்தனர்.

இவர்களில் ஒருவர் இராணுவத்தில் இருந்து தலைமறைவானவர் எனக் கூறப்படுகிறது.

அவரது வீட்டில் தேடுதல் நடத்திய பொலீஸார் புதைக்கப்பட்டிருந்த துப்பாக்கியை மீட்டனர்.

வர்த்தகர்களை மிரட்டிக் கப்பம் பெறுவதற்காக இவ்விருவரும் துப்பாக்கியை அபகரித்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர். (இ-3-21)


எமது புதிய வெளியீடு!

ராம்கி – சங்கவி கவுண்டமணி நடித்த

எல்லாமே என் பொண்டாட்டிதான்

ஓடியோ CD வெளியீடுகள்!

★ பொண்ணு வீட்டுக்காரன்
★ எல்லாமே என் பொண்டாட்டிதான்
★ சூரியப் பார்வை
★ மாஸ்டர்

சுப்பலோ வீடியோ

யாழ்ப்பாணம்.

(சி/4830)



எமது புதிய வெளியீடு!

ராம்கி - சங்கவி - ராதிகா நடித்த

எல்லாமே என் பொண்டாட்டி தான்

( ஒறிஜினல் )

வீடியோ விமல்

யாழ்ப்பாணம்.

(சி/4828)


### மத்தியஸ்தம்…

(முதலாம் பக்கத் தொடர்)

வகிக்க விரும்பவில்லை. அத்துடன் நாடு பிளவு படுவதையும் விரும்பவில்லை.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதானத்தைக் கொண்டு வருவதற்கு இலங்கைக்கு இந்தியத் துருப்புக்களை அனுப்பினார்.

இந்த நடவடிக்கையின் போது இந்தியத் துருப்பினர் பலர் கொல்லப்பட்டனர்.

1991 ஆம் ஆண்டில் தமிழீழம் கோரும் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என்று சந்தேகிக்கப்படும் தற்கொலைப் படையாளியான பெண் ஒருவரால் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார்.

ராஜீவ்காந்தி இவ்வாறு இலங்கையில் தலையீடு செய்ததன் காரணத்தால் இந்தியாவுக்கு பெரும் சஷ்டங்கள் ஏற்பட்டன. எனவே மீண்டும் அதேமாதிரியான தவறைச் செய்வதற்கு நாடு தயாராக இல்லை — இப்படி அவர் மேலும் சொன்னார்.

விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் சமீபத்தில் கொழும்பில் இருந்து வெளிவரும் சண்டே லீடர் வார இதழுக்கு அளித்தபேட்டியில் இலங்கையின் இனப் போருடன் தொடர்பு இல்லாத நாடு அல்லது அமைப்பின் மத்தியஸ்தத்தையே விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்வர் என்று தெரிவித்தது தெரிந்ததே. (இ-3-6)

### மீன்…

(முதலாம் பக்கத் தொடர்)

சடலமாக ஏறாவூர் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டவர் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3-21)

### பாதாள…

(முதலாம் பக்கத் தொடர்)

யிருந்த அனுசா குமுதினி ( 22 வயது ) என்ற இளம் பெண்ணும் இந்தத் தாக்குதலில் உயிரிழந்தார்.

இந்தக் கொலைகள் தொடர்பாக விசாரணை நடத்திய கம்பஹா நீதிவான் துப்பாக்கிப் பிரயோகம் செய்த பொலீஸாரைக் கைது செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார். [இ-3-6]

# ராமகிருஷ்ண சுவாமிகள் ஆதீனத்தில் வரவேற்பு

யாழ்ப்பாணம், செப். 10

யாழ்ப்பாணத்துக்கு நல்லெண்ண விஜயம் மேற்கொண்டுவந்துள்ள சென்னை செங்கல்பட்டு ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் செயலாளர் ஸ்ரீ மத் விருபாக்ஷானந்தாஜி தலைமையிலான சுவாமிகள் குழுவினருக்கு நேற்று நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் சமய பூர்வமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

கொக்குவில் ஸ்ரீ சாரதா மகளிர் வித்தியாலயத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற வைரவிழாவில் பங்கு பற்றிய சுவாமிகள் குழுவினர் மாலை 4. 30 மணியளவில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தை வந்தடைந்தனர்.

பின்னர் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெற்ற மாலைப் பூசையில் சுவாமிகள் குழுவினர் பங்கு பற்றினர்.

தொடர்ந்து மங்கள வாத்தியங்கள் இசைக்க, நல்லை ஆதீனத்தைச் சேர்ந்த மாணவர்கள் அணிவகுத்து வர, கொடி, குடை, ஆலவட்டம் புடைசூழ சுவாமிகள் குழுவினர் அழைத்து வரப்பட்டனர்.

ஆதீனமாணவிகள் பூரண கும்பம் ஏந்திய வண்ணம் சுவாமிகளின் முன் அணிவகுத்துச் சென்றனர்.

சுவாமிகள்குழுவினர் ஆதீன வாசலை அடைந்ததும் அங்கு நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் அவர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்றார்.

பின்னர் ஆதீனமாணவியர்களின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது. தொடர்ந்து ஆதீனத்தில் இடம்பெற்ற விசேட பூசைகளில் சுவாமிகள் குழுவினர் பங்கு பற்றினர்.

தொடர்ந்து ஆதீன முதல்வர் தலைமையில் சமயச் சொற்பொழிவும், பரிசில் வழங்கல் நிகழ்வும், ஆசி வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன.

ஸ்ரீமத் சுவாமி விருபக்ஷானந்தாஜி மற்றும் ஸ்ரீ மத் ஆத்மகணானந்தாஜி, ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்தாஜி ஆகியோர் சமயச் சொற்பொழிவாற்றினார்.

நல்லை ஆதீன முதல்வர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் ஆறு திருமுருகன், நல்லை ஆதீன மாணவன் எஸ். திருக்குமரன் ஆகியோர் ஆசியுரையும், வரவேற்புரையும் நிகழ்த்தினர். [இ-7]

### ஈழவேந்தன்…

(முதலாம் பக்கத் தொடர்)

பான வழக்கு நேற்று எடுக்கப்பட்ட சமயம், குற்றச்சாட்டுக்கு போதிய ஆதாரம் இல்லை எனத் தெரிவித்து நீதிவான் அவர்களை விடுதலை செய்தார். (இ-3-6)

### தொண்டாவுக்கும்…

(முதலாம் பக்கத் தொடர்)

செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி தாக்கல் செய்த மனு மீதான விசாரணை நேற்று கொழும்பு மாவட்ட நீதி மன்றத்தில் இடம்பெற்ற போது இருவரும் சமூகமளிக்காததாலேயே நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்தார். (இ-3-21)

## குற்றமிழைத்த…

( முதலாம் பக்கத் தொடர் )

கொண்டுள்ளது.

கடந்த 15 ஆண்டு காலத்தில் பாதுகாப்புப்படையைச் சேர்ந்த ஒருவர் கூட கொலைக் குற்றத்துக்குத் தண்டிக்கப் படவில்லை.

இலங்கையில் ஆயிரக்கணக்கான அட்டூழியங்களை நிகழ்த்தியவர்களைக் கண்டிப்பதற்கு இலங்கை அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் போதாது என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் சட்ட வல்லுநர் வில்லியம் ஹூடாக் பிரபு தலைமையில் சர்வதேச ஜூரர்கள் சபையைச் சேர்ந்த மூவர் கடந்த ஆண்டு இலங்கை வந்து விசாரணை நடத்தினர்.

அவர்கள் ஜெனீவா திரும்பிச்சென்று தயாரித்த 156 பக்க அறிக்கையிலேயே மேற்கண்ட குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

அறிக்கையின் நகல் ஒன்று ஐந்து மாதங்களுக்கு முன்னரே இலங்கை அரசுக்கு அனுபபி வைக்கப்பட்டது என்றும் —

ஆனால் இலங்கை அரசு இதுவரை பதில் அனுப்பவில்லை என்றும் ஜூரர்கள் சபை தெரிவித்துள்ளது. [இ-21-6]


உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மணே நம!

## திருமண அழைப்பு

♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥

அன்புடையீர்!

நிகழும் வெகுதானிய வருடம் ஆவணி மாதம் 27 ஆம் நாள் (12 – 09 – 1998) சனிக்கிழமை பகல் 11 – 30 மணிமுதல் 12 – 07 வரையுள்ள அமிர்தயோகமும் ரோகிணி நட்சத்திரமும் கூடிய சுப வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் **கோகுலன்** அவர்களுக்கும்



எமது சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி **தவமலர்** அவர்களுக்கும்

வண்ணை கேசாவில் பிள்ளையார் ஆலயத்தில் திருமணம் செய்யப்பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் சமுகம்தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

13 - 09 - 98 ஞாயிற்றுக்கிழமை பி. ப, 3.00 மணிக்கு மணமகன் இல்லத்தில் வரவேற்பு உபசாரம் நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு. திருமதி பரராமசிங்கம்
பெரியமாவடி லேன்,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

திரு. திருமதி திருச்செல்வம்
திரு. திருமதி மகாலிங்கம்
(V. V. M. S. ஜுவலறி, சாவகச்சேரி.)
32, கேசாவில் பிள்ளையார் வீதி,
வண். வடமேற்கு, யாழ்ப்பாணம்.

(இரு வீட்டார் அழைப்பு)

(59055)



## சிவநெறி கல்வி நிலையம்

(ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அருகில்)

G. C. E. O/L PAPER CLASS

கணிதம் : — B. கிருபாகரன்
விஞ்ஞானம் : — I. தயாபரன்

(சி/4819)



## LION AIR

நாளை (11-09-98) எமது விசேட விமான சேவை இருப்பதால் அவசர பயணங்கள் மேற்கொள்பவர்கள் இன்று 10-09-98 இல் எமது யாழ். காரியாலயத்திலும், பருத்தித்துறை, சாவகச்சேரி காரியாலயத்திலும் பதிவுகளையும், ரிக்கட்டுகளையும் பெற்றுக்கொள்ளலாம் என அறியத்தருகிறோம்.

MARKANDU STORES
LION AIR
37, KASTHURIYAR ROAD, JAFFNA.

(சி/4825)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10-09-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org